விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: எட்டு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 ஆடி 20 சனிக்கிழமை (05.08.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 229

ராம்கோ MADRAS CEMENTS LTD RAMCO CEMENT RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சிமெந்து

# மூதூரில் அனைத்துப் பகுதிகளும் புலிகளின் பூரண கட்டுப்பாட்டில்


## இராணுவ முகாம்களும் சுற்றிவளைப்பு என்கின்றனர் இடம்பெயர்ந்த மக்கள்

(திருகோணமலை)

மூதூரில் அனைத்துப் பிரதேசமும் விடுதலைப்புலிகளின் பூரண கட்டுப்பாட்டில் இருப்பதாக அங்கிருந்து இடம்பெயர்ந்து இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்த மக்கள் தெரிவித்துள்ளனர். பெருமளவான இராணுவ முகாம்களை விடுதலைப்புலிகள் சுற்றிவளைத்துள்ளதாகவும் தொடர்ந்து தாக்குதல்கள் இடம்பெற்று வருவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

மூதூர் பகுதிக்குள் தத்தளித்துக் கொண்டிருந்த மக்களைப் பாதுகாப்பான பிரதேசங்களுக்கு வெளியேற்றுவதற்காக இராணுவமும் விடுதலைப்புலிகளும் ஷெல் தாக்குதலை குறிப்பிட்ட நேரம் நேற்று நிறுத்தி வைத்தனர்.

இதனையடுத்து மூதூரிலிருந்து 14 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள பாலத்தோப்புப் பகுதிக்கு மக்கள் கால்நடையாக நேற்று வந்து சேர்ந்துள்ளனர். (08 ஆம் பக்கம் பார்க்க)



## யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு பெளயர் பல்வேறு தரப்பினருடன் பேச்சு

### நாளை தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு

(கொழும்பு)

இராணுவத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில்ஏற்பட்டுள்ள பாரிய யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவது குறித்தும் போர்நிறுத்தக் கண்காணிப்பாளர்களின் பணிகள் குறித்தும் ஆராய்வதற்காக இலங்கையின் சமாதானத் தூதுவர் ஜோன் ஹான்சன் பெளயர் நேற்றுக் கொழும்பு வந்தடைந்தார்.

நோர்வேயின் விசேட தூதுவர் ஜோன் ஹான்சன் பெளயர் வெளிவிவகார அமைச்சர், அரச சமாதான செயலகப் பணிப்பாளர் ஆகியோரை நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

நேற்றுக் காலை இலங்கை வந்தடைந்த ஜோன் ஹான்சன் பெளயர் நாட்டின் தற்போதைய நிலைவரங்கள் குறித்து விரிவாக ஆராய்ந்து வருகிறார்.

ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேர்ந்த மூன்று நாடுகள் போர் நிறுத்தக்கண்காணிப்புக் குழுவிலிருந்து தமதுபிரதிநிதிகளை விலக்கப் போவதாக அறிவித்துள்ள சந்தர்ப்பத்தில் ஏற்படக் (08 ஆம் பக்கம் பார்க்க)

## எறிகணைத் தாக்குதலில் மூவர் பரிதாப மரணம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாகரை பனிச்சங்கேணிக் கோவில் குடியிருப்பை நோக்கி மேற்கொள்ளப்பட்ட எறிகணைத் தாக்குதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் கொல்லப்பட்டும் நால்வர் படுகாயமடைந்தும் உள்ளனர்.

நேற்று அதிகாலை 4.30 மணியளவில் படையினர் பனிச்சங்கேணி நோக்கி முன்னேறிச் சென்றதாகவும் பின்னர் வாழைச்சேனை மற்றும் புனானை படை முகாமகளிலிருந்து மக்கள் குடியிருப்புக்களை நோக்கி எறிகணை வீச்சுத் தாக்குதலை மேற்கொண்டு முன்னேறியபோது (08 ஆம் பக்கம் பார்க்க)

## மூதூரில் இடம்பெயர்ந்த மக்களுக்கு

# மேலும் 5 முஸ்லிம் அகதிகள் எறிகணைத் தாக்குதலில் பலி!

(திருகோணமலை)

மூதூர் பகுதிகளில் நடந்துவரும் உக்கிர மான சண்டைகளிலிருந்து தப்பிக் கொள்ள அங்கிருந்து வெளியேறும் அகதிகள்மீது வீழ்ந்து வெடித்த எறிகணையால் ஐந்து முஸ்லிம்கள் பலியாகினர்.

தச்சனூர் ஏ-15 தெருவின் 64-வது மைல்கல் அருகே நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் முஸ்லிம் அகதிகள் வெள்ளைக் கொடியில் செல்லும் போது எறிகணை ஒன்று அவர்களுக்கு அருகே வீழ்ந்து வெடித்துள்ளது.

இதில் ஐந்துபேர் பலியானதுடன் மேலும் இருவர் காயமடைந்துள்ளனர். கடந்த மூன்று நாட்கள் நடந்த (08 ஆம் பக்கம் பார்க்க)

# மூதூரில் இடம்பெயர்ந்த மக்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் உதவி

(திருகோணமலை)

திருகோணமலைப் பகுதியில் 10 ஆயிரத்திற்கும் அதிகமான அகதிகளுக்கு 24 மணி நேரமும் தொடர்ச்சியான பாதுகாப்பையும் நிவாரண உதவிகளையும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் திருகோணமலைக் கிளை வழங்கி வருகின்றது.

பல மடங்காக அதிகரிக்கலாம் என எதிர் பார்க்கப்படும் இந்த அகதிகளைப் பராமரிக்க அரசின் பாரபட்சமற்ற உதவியையும் புனர்வாழ்வுக்கழகம் கோரியுள்ளதாக அவ் அமைப்பு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் குழு மற்றும் கண்காணிப்புக் குழுவினருக்கும் இதுபோன்ற (08 ஆம் பக்கம் பார்க்க)

# யுத்தநிறுத்தத்தை கடைப்பிடிக்குமாறு கோரி மட்டக்களப்பில் ஆர்ப்பாட்டம்

(மட்டக்களப்பு)

மூதூர் பிரதேசத்தில் அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் உடனடியாக யுத்தநிறுத்தத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று கோரி நேற்று மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

காத்தான்குடி, மொஹைறதீன் மெத்தைப் பள்ளிவாசலில் நேற்று வெள்ளிக்கிழமை நண்பகல் ஜும்மாத் தொழுகையின் பின்பு நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட முஸ்லிம்கள், மோதலில் ஈடுபட்டுள்ள இருதரப்பினரையும் யுத்தசூழலில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் சென்றடைய இடமளிக்க வேண்டும்,

பொதுமக்கள் தொடர்பில் சர்வதேச யுத்த நியமனங்களைக் கடைப்பிடிக்கவேண்டும் என்பன உட்பட சில கோரிக்கைகளை வலியுறுத்தும் வகையில் வாசக அட்டைகளை ஏந்தியிருந்தனர். (எ-5)

## மக்கள் வங்கியின்

# காங்கேசன்துறை கிளை முகாமையாளர் பொன்.கணேசமூர்த்தி சுட்டுக் கொலை

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கியின் காங்கேசன் துறைக் கிளை முகாமையாளர் பொன்.கணேசமூர்த்தி (வயது-56) நேற்றுக் காலை இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை தனது வங்கிக்குக் கடமைக்காக மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது தபால் பெட்டிச் சந்தி, தலங்காவற் பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் வைத்து நேற்றுக் காலை 8.30 மணியளவில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

அவரைப் பின்தொடர்ந்து வந்த இனந்தெரியாதோரே சுட்டு விட்டு தப்பிச் சென்றதாக விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

இச் சம்பவம் தொடர்பாக நேரடியாகச் (08 ஆம் பக்கம் பார்க்க)



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இஸ்ரேலின் மிலேச்சத்தன தாக்குதலுக்கு புதிய - ஜனநாயக கட்சி கண்டனம்

(கொழும்பு)

பலஸ்தீனத்திலும் லெபனானிலும் தொடர்ச்சியாக இஸ்ரேலியப் படைகள் நடாத்திவரும் மிலேச்சத்தனமான தாக்குதல்களால் மக்கள் நாளாந்தம் உயிரிழந்தும், படுகாயங்கள் அடைந்தும் வருகின்றனர். முக்கியமான கட்டடங்கள் குறிவைத்து தாக்கி தகர்க்கப்பட்டும் வருகின்றன. இஸ்ரேலிய சியோனிஸப் பயங்கரவாதம் தனது முழுமையான சுயரூபத்தை வெளிப்படுத்தி நிற்கிறது. அமெரிக்காவின் ஆசீர்வாதத்தோடு நடாத்தப்படும் இஸ்ரேலின் பலஸ் தீன-லெபனான் மீதான வெறித்தனத் தாக்குதல்களை புதிய- ஜனநாயக கட்சி மிக வன்மையாகக் கண்டிக்கின்றது. அத்துடன் பலஸ்தீன லெபனானிய மக்களுக்கு தனது ஒருமைப்பாட்டையும் தெரி விகின் றது.

அதேவேளை மனித நேயத்தையும் விடுதலை சுதந்திரத்தையும் நேசித்து ஒடுக்கு முறைகளை எதிர்க்கும் அனைத்து நேர்மையான முற்போக்கு ஜனநாயக இடதுசாரி சக்திகளும் மேற்படி தாக்குதல்களை கண்டித்து நிறுத்துமாறு வற்புறுத்த வேண்டும்.

இவ்வாறு புதிய -ஜனநாயக கட்சியின் அரசியல் குழு சார்பாக இஸ்ரேலின் பலஸ்தீன- லெபனானிய மக்கள் மீதான தாக்குதல்களைக் கண்டித்து அதன் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேலும் அவ்வறிக்கையில், உலகப் பயங்கரவாதம் பற்றி அமெரிக்கா நாளாந்தம் கூக்குரல் இட்டு வருகிறது. பயங்கரவாதத்தைஎதிர்த்து முறியடிக்கும் புனிதப்பணி எனக் கூறி ஈராக்கிலும் ஆப்கானிஸ்தானிலும் அப்பட்டமான ஆக்கிரமிப்பில் ஈடுபட்டும் வருகிறது. ஈரானையும் சிரியாவையும் நேரடியாகவே எச்சரித்து அச்சுறுத்தியும் வருகின்றது. அதே அமெரிக்கா இஸ்ரேலியப் பயங்கரவாதத்திற்கு ஆதரவு தெரிவித்து பலஸ்தீனம் லெபனான் நாடுகளின் மீது காட்டு மிராண்டித்தனமான தாக்குதல்கள் நாடத்துவதை அங்கீகரித்து நியாயப் படுத்தியும் நிற்கின்றது.

அதற்கு பிரித்தானிய ஆட்சியினர் அடிமைத்தனமாக_வக்காலத்து வாங்கி வருகின்றனர். அரபுலகின் எண்ணெய் வளத்தைக் கொள்ளையடித்து அள்ளிச் செல்லவும் அதற்கு குறுக்கே நிற் கும் முஸ்லிம் நாடுகளையும் மக்களையும் தலைமைகளையும் அடக்கி ஒடுக்கவும் வலுவான தளமாகவும் பயங்கர ஆயுதமாகவும் தோற்றுவிக்கப்பட்ட இஸ்ரேல் நாடே இன்று ஏகாதிபத்தியக் கரங்களாகவேலைசெய்து வருகின்றது.

எனவே இன்று அமெரிக்காவையும் மேற்குலகையும் எதிர்த்து வரும் பலஸ்தீன் லெபனானிய மக்களை கொன்று குவிக்க இஸ்ரேல் ஏவி விடப்பட்டிருக்கிறது. இஸ்ரேலியப் பாதுகாப்புக்கு நடாத்தப்படும் தாக்குதல் என்ற பெயரில் இஸ்ரேலியப் பயங்கரவாதிகள் நடாத்தி வரும் மிலேச்சத்தனமான தாக்குதல்களால் பச்சிளங்குழந்தைகள் உட்பட வகைதொகை இன்றிமக்கள் கொல்லப்படுகின்றனர். இன்று அமெரிக்காவின் அனுசரணையுடன் நடாத்தப்படும் பலஸ்தீன- லெபனானிய மக்கள் மீதான காட்டு மிராண்டித்தனத் தாக்குதல் அனைத்து ஏகாதிபத்திய எதிர்ப்பு விடுதலைப் போராட்டங்களையும் அச்சுறுத்தி அடிபணிய வைக்கும் உள்நோக்கத்துடனும் நடாத்துப் படுகிறது. அதனாலேயே ஐ.நா. பாதுகாப்புச் சபை உட்பட பல அரசாங்கங்கள் இஸ்ரேலின் கொடூரத் தாக்குதல்களைக் கண் டிக்கவோ தடுத்து நிறுத்தவோ முன் வராத நிலை காணப்படு கிறது. உலக மக்களோடும் இலங்கையின் முற்போக்கு ஜன நாயக இடதுசாரி சக்திகளோடும் இணைந்து மேற்படி தாக்குதல்களை "எமது புதிய -ஜன நாயக கட்சி மிக வன்மையாகக் கண்டிக்கின்றது. உடன் நிறுத்து மாறு வற்புறுத்துகிறது. (அ)

## சர்வமதப் பிரார்த்தனையும் பேரணியும்

(யாழ்ப்பாணம்)

யாழ். விழிப்புலனற்றோர் சங்கம் யாழ்மாவட்டத்திலுள்ள ஊனமுற்றவர்கள் அனைவரையும் இணைத்து எதிர்வரும் 7 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் சர்வமதப் பிரார்த் தன்னையையும் தொடர்ந்து பேரணியினையும் நடத்தவுள்ளனர். (அ)

## இராசி பலன்

**05.08.2006**
**(ஆடி 20 , சனிக்கிழமை)**
**ஏகாதசிமுன்னிரவு 11.31 மணிவரை**
**கேட்டைமுன்னிரவு 9.57மணிவரை**
**இராகுகாலம். 9.4-10.34மணிவரை**
**சுபநேரம் 3.04-4.34மணிவரை**
**ஏகாதசிவிரதம்**

| | |
|---|---|
| மேடம் | அபகீர்த்தி, காரியதாமதம், போசனசுகம், பிரயாணபயம் |
| இடபம் | நண்பர்கள் சந்திப்பு , எடுத்தகாரியம் கைகூடும், பிரயாண நன்மை, கலந்துரையாடல் |
| மிதுனம் | தேகநலன், சுபநிகழ்வு, எடுத்தகாரியம் கைகூடும், மனமகிழ்ச்சி |
| கடகம் | வியாபார நன்மை, முயற்சிதாமதம், புத்திரரால் கவலை, ரோகநிலை |
| சிங்கம் | கல்வியில் ஆர்வம், வாகனசுகம், முயற்சிதாமதம், பணவிரயம் |
| கன்னி | அந்நியர் சந்திப்பு, வாக்கு மேன்மை, போசனசுகம், இனியநிகழ்வு |
| துலாம் | வீண்பகை , எடுத்தகருமங்கள் தாமதமாகும் , பணவிரயம் , குடும்பக்கவலை |
| விருச்சிகம் | தன்னம்பிக்கை , போசனசுகம், நல்ல முயற்சி நண்பர்கள் சந்திப்பு |
| தனுசு | எடுத்தகாரியம் தாமத மாகும், உறவினர் மனஸ்தாபம், எதிர்பாராதநன்மை, சுபசெலவு. |
| மகரம் | ஆரோக்கியம், காரியஅனுகூலம், கீர்த்தி , உறவினர்வருகை. |
| கும்பம் | சரீரப்பிரயாசை , அறிஞர்கள் சந்திப்பு , காரிய அனுகூலம், நற்பெயர். |
| மீனம் | புதிய திட்டமிடல், பித்த ரோகம், பிரயாணம், பணவிரயம். |

- வளவன்

## லெபனானிலிருந்து நாடுதிரும்புபவர்களை கடவுச்சீட்டின்றி அனுமதிக்க நடவடிக்கை

லெபனானில் காணப்படும் தற்போதைய சூழ்நிலையினால் கட வுச் சீட்டுக்களை இழந்தவர் களிடம் தண்டப் பணம் பெறுவதற்குப் பதிலாக புதிய கடவுச் சீட்டினை பெற் றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக குடிவரவு குடிய கல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

தண்டப் பணமாக ரூபா 10 ஆயிரம் அறவிடுவதற்குப் பதிலாக சாதா ரண செலவில் புதிய கடவுச் சீட் டினை பெற்றுக்கொடுப்பது தொடர்பாக ஆலோசனை நடத்தி வருவதாக குடிவரவு குடியகல்வு திணைக்கள நிறைவேற்று அதிகாரி அபயக்கோன் பண்டார தெரிவித்துள் ளார்.

விசேட விமானங்கள் மூலம் இலங்கைக்கு வருகை தருபவர்களை கடவுச்சீட்டுடனோ, கடவுச் சீட்டு இன்றியோ அனுமதிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ள தாகவும் அவர் குறிப்பிட்டார். லெபனானில் உள்ள இலங்கைத் தூதரகத்தினால் வழங்கப்படும் பத்திரத்துடன் வருகை தரும் இலங்கையர்களுக்கு இந்தச் சலுகை வழங்கப்படவுள்ளதாக அவர் கூறினார்.

இதேவேளை கண்டி, மாத்தறை மற்றும் அநுராதபுரம் ஆகிய மாவட் டங் களில் குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தின் கிளைக் காரியாலங்களை திறப்பதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன. கணனி மயப்படுத் தப்பட்ட இந்த குடிவரவு, குடியகல்வுத் திணைக்களங் களில் அடையாள அட்டை வழங்குவதிலிருந்து, கடவுச் சீட்டுக்கள் வழங்குவது வரை சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ள திட்டமிடப்பட் டுள்ளது. (அ-7)


## யுத்தத்தைத் தொடராமல் அரசும் புலிகளும் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கவேண்டும்

மாவிலாறு அணைக்கட்டை மூடி பொதுமக்களை அல்லலுறவைக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளின் செயல்களை ஐக்கிய தேசியக்கட்சி கண்டித்துள்ளது.

இந்த நிலைமை தொடராமல் தடுப்பதற்கு அரசாங்கமும், தமிழீழ விடுதலைப்புலிகளும் விரைவாக பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டுமென்பது அக்கட்சியின் கோட்பாடாகும். நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஊடக மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துத்தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் ஜோன்சன் பனாண்டோ, தமது கட்சி தொடர்ந்தும் சமாதானத்திற்காக முன்னின்று செயற்படுகின்றது.

சமாதான முயற்சிகள் மீண்டும் உயிர்த்தெழுவதற்கு தேவையான பின்னணியை உருவாக்க வேண்டும் இதற்காக ஐக்கிய தேசியக்கட்சி தமது பூரண ஆதரவை வழங்கவுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (அ-9)

## நல்லூரான் திருவடிக்கு இன்று ஏழாம் திருவிழா



### வேலாயுதத்துடனே வருவாய் !

தேவியர் புடைசூழ வலம்வரும் நல்லைக்கந்தா
பாவியர் நாமிலங்கு நலிவுற்று இடர்ப்பட்டு
கூவியழைத்தே தினம் குறைபயின்று நிற்கின்றோம்
ஆவியைக் காத்திடவே லாயுதத்துடனே வருவாய்

*குகதாசசர்மா சிவகுமார்*
*மயிலணி, சுன்னாகம்.*

### நண்ணுவினை நணுக்காமல்

மண்ணின் னுலக மாதரை மகிழ்ந்தாய்
அண்ணலார் நுதற்கணின் றவதரித்த வழகா
விண்ணவர் சிறைவிடுத்தாய் விரும்புநின் னடியாரை
நண்ணுவின் நணுகாமல் நல்லூரை நயந்தவனே

*சிவ. சண்முகவடிவேல்*

### வண்ண மயிலேறும் வேலவா!

*உன்னை நம்பினால் வாழலாம்*
*உலகை வென்றே ஆளலாம்*
*எண்ணிய யாவையும் அடையலாம்*
*ஏற்றங்கள் சேர்த்து வாழலாம்*
*திண்ணிய நெஞ்சத்தை பெறலாம்*
*தேசத்தின் மாண்பினைக் காக்கலாம்*
*வண்ண மயிலேறும் வேலவனே*
*வணங்கி வழிபடுகிறோம் வழிகாட்டு*

*மதுரகவி. காரை எம்.பி அருளானந்தன்*

### அடியவர்க்கு அருளும் கந்தா

கங்கை நதிமுடிமீது அணிந்தவன மைந்தனே சரவணபவனே
மங்கை வள்ளி மணாளனாய் வந்தாயே சண்முகனே
வேங்கை மரமாய் நின்றாயோ குமரகுருபரனே நல்லூர் கந்தனே
வேண்டும் அடியவர்க்கு வேண்டும் வரமருளிக் காக்கும் நல்லூர் கந்தனே!

*சின். கந்தையா திக்கரை*

### அல்லலதை மாற்றும் மருந்து

அல்லும் பகலும் அறுமுகன் நாமத்தை
சொல்லும் அடியாரின் துன்பம்பேரம் - நல்லூரில்
வீற்றிருந்த ருள்புரியும் வேலவனெம் அல்லலதை
மாற்றுதற்கு நீதான் மருந்து

*கவிஞர் நடசிவ இராகுலன்*

### வந்தடையும் வாழ்வில் வளம்

வீதி வலமாக வந்தவினை தீர்க்கின்ற
சோதி முகங்காணச் சோகம்போம் - பீதியெலாம்
தூசாகி இன்பச் சுடர்வீசும் நல்லூரான்
ஊசாட வந்தநல் ஊர்

விந்தையாய்ச் சோடித்து வீதி வலமுருங்
கந்தையன் காட்சியினை நல்லூரிற் - சந்தித்தாற்
சிந்தை மகிழுஞ் சுகத்தோடு செல்வாக்கும்
வந்தடையும் வாழ்வில் வளம்.

*சி. இராசரத்தினம்*

## நாவலர் மணிமண்டபத்தில் ஆன்மீகச் சொற்பொழிவு

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் நல்லூர் உற்சவகாலஏழாம் நாள்நிகழ்வான 'ஆன்மீக சிந்தனையுடன் கூட்டுப் பிரார்த்தனையும்' இன்று பி.ப 3 மணிக்கு நாவலர் மணி மண்டபத்தில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள வலிகாம அபிவிருத்தி உதவியாளர் த.பிரதீஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் 'கந்தசஷ்டி விரதத்தின் மகிமை' என்னும் தலைப்பில் இந்து இளைஞர் மன்றத் தலைவர் அ.வாசுதேவா சிறப்புச் சொற்பொழிவும், ஊரெழு சிவபூரணி முத்தமிழ் மன்ற அறநெறிப் பாடசாலை மாணவர்களதும், அராலி கோமாதா அற நெறிப் பாடசாலை மாணவர்களதும் கூட்டுப் பிரார்த்தனையும்இடம்பெறும். (அ-133)

# "மீண்டும் இலங்கை எரியும்" என்று சொன்னதை செய்த இந்திய இராணுவம்

**வல்லரசுப் படுகொலையின் 17ஆவது ஆண்டு நினைவை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது.**



1919 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13 நாளன்று இந்தியாவில் அமிர்த சரஸ் நகரிலே ஜெனரல் டயர் தலைமையில் ஆங்கிலேய "இராணுவம் நடாத்திய மனிதப் படு கொலையைவிட மிகப் பயங் கர மான படுகொலையை 1989 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 2, 3, 4 ஆம் திகதி களில் நடாத்தி யிருக்கிறது. அகிம்சை வழிசுதந்திரம் கண்ட அண்ணல் காந்தியின் வழிவந்த காங்கிரஸ் கட்சி ஆட்சி புரிந்த இந் திய உப கண்டத்தின் இராணுவம்.

வல்வெட்டித்துறையில் இந்திய இராணுவம் நடாத்திய இப் படு கொலையை வியட்நாமில் இடம் பெற்ற மயில்லாய படுகொலைக்குச் சமமாக ஒப்பிட்டிருக்கிறார். ஜன தாக் கட்சியின் தலைவர்களில் ஒருவ ரான ஜார்ஜ் பெர்னாண்டஸ். வியட் நாமிலே மயிலாய என்ற இடத்தில் அமெரிக்க இராணுவம் நடத்திய காட்டு மிராண்டித்தனமான படு கொலையை உலகமே கண்டித்தது.

ஆனால் வல்வெட்டித்துறையிலே இந்திய அரசு நடத்திய இப்படு கொலைச்சம்பவத்தை திட்டமிட்டு மறைத்தது. பெரும்பாலான இந்தியப் பத்திரிகைகளும் இப் படுகொலைச் சம்பவத்தை மறைப்பதில் இந்திய அரசுக்கு உறுதுணையாக நின்றன.

ஆனால் இப்பயங்கரபடுகொலை ச்சம்பவம் நிகழ்ந்த 13 நாட்களுக் குப் பின் வல்வெட்டித்துறைக்குச் சென்ற லண்டன் பைனான் ஸியஸ் டைம்ஸ் பத்திரிகையின் டெல்லி நிருபர் டேவிட் ஹவுஸ்கோ இச் சம் பவம் பற்றிய குழு விபரங்களையும் முதன் முதலாக தமது பத்திரிகை யில் வெளி யிட்டதைக கண்டு அகில உலகமே அதிர்ச்சயடைந்தது.

1989ஆம் ஆண்டு ஆகஸ்ட மாதம் 2ஆம் திகதி காலை வெல் வெட்டித்துறை சந்தைச் சதுக்கத்தில் எதிர்பாராத விதமாக விடுதலைப் புலிகளுக்கும் இந்திய இராணுவத் திற்கு மிடையே ஏற்பட்ட மோதலில் 6 இந்திய வீரர்கள் இறந்ததுடன் 11 பேர் காயமடைந்தனர்.

இதையடுத்து வல்வெட்டித் துறையைச் சுற்றியிருந்த மூன்று இராணுவமுகாம்களிலிருந்த ஆயி ரக்கணக்கான இந்திய இராணுவத் தினர் வெறியுடன் புறப்பட்டு வல் வெட்டித்துறையைச் சுற்றிவளைத் தனர். உடனடியாக ஊரடங்குச் சட் டத்தைப் பிரகடனப்படுத்தினர். மூன்று நாட்களுக்கு அச்சட்டம் நீடிக்கப்பட்டது. வீடுகளை விட்டு வெளியே வராமல் அச்சத்துடன் பதுங்கியிருந்த மக்களை கதவு களை உடைத்து உட்புகுந்த இரா ணுவம் பதறப் பதறச் சுட்டுக் கொன் றது. இந்த வெறியாட்டத்தில் 63 பேர் படுகொலை செய்யப்பட்டனர். நூற்றுக்கணக்கானவர்கள் படுகாய மடைந்தார்கள். காயமடைந்தவர் களுக்கு மருத்துவ உதவி வழங்க முன்வந்த பிரான்ஸ் மருத்துவக் குழுவினரை ஊருக்குள் நுழை யவே இராணுவம் அனுமதிக்க வில்லை.

மொத்தம் 123 வீடுகள் அடி யோடுநாசமாக்கப்பட்டன. 45கடைகள் எரிக்கப்பட்டன. 12 மீன்பிடிப் பட குகள் நாசம் செய்யப்பட்டன. 176 மீன்பிடி வலைகள் எரியூட்டப்பட்டன. வீடுகளில் இருந்த பணம், நகை, மின் உபகரணங்கள் இந்திய இரா ணுவத்தால் கொள்ளையடிக்கப் பட்டன. ஏராளமான பெண்கள் பாலி யல் வன்முறைகளுக் குள்ளாக்கப் பட்டனர்.

இந்த நிகழ்ச்சி நடப்பதற்குச் சில மாதங்களுக்கு முன்னர் இந் திய பிரிகேடியர் சங்கர் பிரசாத் மக் கள் குழு உறுப்பினர்களை அழைத்து பின்வருமாறு கொக்க ரித்தார்.

இந்திய இராணுவம் மீது புலி கள் தாக்குதல் மேற்கொண்டால்



உங்கள் ஊரை அடியோடு எரிப் பேன். நூற்றுக்கணக்கில் மக்களைச் சுட்டுத்தள்ளுவேன் இராமாயா ணத்தில் இலங்கை எரிக்கப்பட்டது போல மீண்டும் இலங்கை எரியும். எங்களை யாரும் எதுவும் செய்ய முடியாது நாங்கள் உலகின் நான் காவது பெரிய இராணுவம்.

அவர் மிரட்டியதைப் போலவே சில நாட்களில் அழகிய வல்வெட் டித் துறை சுடுகாடானது. வல்வெட் டித் துறையால் மட்டுமல்லாமல் அங் கிருந்து 2 கிலோ மீற்றர் தொலை விலுள்ள ஊரணி, பொலிகண்டி ஆகிய இடங்களிலும் இந்திய இரா ணுவத்தின் வெறியாட்டம் இடம் பெற்றது.

வல்வெட்டித்துறையில் மூன்று நாட்கள் நாவேட்டை நடத்திய இந் திய இராணுவம் தனது வெறியாட் டத்தை திட்டமிட்டு மறைத்தது. ஜனதா தளப் பொதுச் செயலாளர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் இப்பிரச் சினையை அம்பலப்படுத்துவதில் முன்னின்றார். இப் படுகொலை பற்றிய ஆதாரங்கள் புகைப்படங் கள் ஆகியவற்றைத் தொகுத்து ஆங்கிலத்திலும், தமிழிலும், இந்தியி லும் நூலாக வெளி யிட்டு இந்தியா வில் மட்டுமல்ல உலகெங்கிலும் அம்பலப்படுத்தினார். இதனால் ராஜீவ் காந்தி அரசின் முகமூடி கிழிந்தது. ரட்சகர்கள்எனஎண்ணிய இந்திய இராணுவத்தின் இடைசப தம் வெளியானது.

**நன்றி**
**ஆதிகோவிலடி ஜெயம்**

## இலங்கைப் பிரச்சினையில் இந்தியாவின் நிலை

(கொழும்பு)

இலங்கையில் வன்முறைகள் அதிகரிக்காமல் அமைதிப் பேச்சு வார்த்தைகள் தொடர்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்குமாறு இலங்கை அரசை இந் தியா கேட்டுக்கொண்டுள்ளது.

இலங்கைப் பிரச்சினை தொடர் பாக நேற்று நாடாளுமன்றத்தின் மேலவையில் பேசிய இந்திய வெளி யுறவுத்துறை இணை அமைச்சர் ஈ. அகமது இலங்கையின் இறை யாண்மை மற்றும் ஒருமைப்பாட்டை காப்பதற்கு இந்தியாவின் உதவி தொடரும் என்று தெரிவித்துள் ளார்.

அனைத்து தரப்பினரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய அரசியல் தீர்வை எட்ட இந்தியா தொடர்ந்துவலியுறுத்தும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். (து)

## கண்காணிப்பு குழுவிலிருந்து விலகினாலும் சமாதான முயற்சிக்கு ஆதரவளிக்கும்

**சுவீடன் வெளிநாட்டு அமைச்சு அறிக்கை**

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிலிருந்து தமது உறுப்பினர் கள் விலகிக் கொண்ட போதும் இலங் கையில் சமாதான முயற் சிகளுக்கு முடியுமான வரை ஆதர வளிக்க வுள் ளதாக சுவீடன் தெரிவித்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அழுத்தம் காரணமாக தமது நாட்டு உறுப்பினர்களை போர் நிறுத்தக் கண்காணிப்பு பணிகளிலிருந்து இடைநிறுத்திக் கொண்டதாக சுவீ டன வெளிநாட்டமைச்சு வெளியிட் டுள்ள அறிக்கை யொன்றில் தெரி விக்கப் பட்டுள் ளது.

போர் நிறுத்த இணக்கப் பாட்டை வலுப்படுத்தி தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு சமாதானத்திற் காகஅர்ப்பணிப்புக்களை செய்யு மாயின் தமது உறுப்பினர்களை இலங்கைக்கு அனுப்பமுடியுமென்று சுவீடன் தெரிவித்துள்ளது.

வன்முறைகளைகைவிட்டுபேச்சு வார்த்தைகள் மூலம் இனப் பிரச் சினைக்கு தீர்வு காண்பதற்கான முயற்சிகளைமேற் கொள்ளு மாறு சுவீடனதமிழீழவிடுதலைப்புலிகளை கேட்டுள்ளது. (அ-9)

## வடக்கே எடுத்துவரப்படவிருந்த எரிபொருட்களை கைப்பற்றியுள்ளதாக சிலாபம் பொலிஸார் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கிற்கு எடுத்துச செல்வ தற்கு தயாராகவைக்கப்பட்டிருந்த எரிபொருள் மற்றும் சிகரெட்டுத் தொகையொன்றை கைப்பற்றி யுள்ளதாகசிலாபம் பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு தலைமையகப் பொலிஸ் சிலாபம் மாதம்பை பிர தேசத்தில் இந் த எரிபொருட்களை கைபபற்றியுள்ளனர். மாதம்பைப் பிரதேசத்தில் உள்ள வர்த்தக நிலை யமொன்றைசோதனையிட்ட பொலி ஸார் இதன் போது ஒருவரை கைது செய்துள்ளனர்.

அவர் வழங்கிய தகவலைய டுத்து வர்த் தகநிலையத்தில் வைக் கப்பட் டிருந்த ஆயிரத்து 500 லீற் றர் பெற்றோல், ஆயிரத்து 700 லீற் றர் மண்ணெண்ணை என்பன கைப் பற்றப்பட்டது

இதே வேளை 5 பேரிடம் வெளி நாட்டு வேலை வாய்ப்புகளை பெற் றுத்தருவதாக க் கூறி 42 இலட்சம் ரூபா மோசடி செய்த ஒருவரை சிலாபம் பொலிஸார் கைது செய் துள்ளனர். (அ-9)


## சிறுவர்களின் மருத்துவ தேவைக்கு "உலக தரிசனம்" உதவி

புணவசதியின்றி அவதியுறும் 18 வயதுக்குட்பட்ட சிறுவர்களின் மருத்துவதேவைக்குதமது அமைப்பு நிதி யுதவி செய்து வருவதாக உலக தரிசனம் (வேள்ட் விஷன்) தெரி வித்துள்ளது.

இதுவரை இருதய சத்திரசிகிச் சைக்காக 5 பிள்ளைகளுக்கும், கிட்னி மாற்று சத்திரசிகிச்சைக்காக ஒரு பிள் ளைக்கும் செயற்கைக்கால் பொருத்துவதற்காக இன்னொரு பிள்ளைக்கும் நிதியுதவி செய்த துடன் பலருக்கு சத்துணவு வழங்கி யுள்ளதாகவும் அந்த அமைப்பு மேலும் தெரிவித்துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை கைதடி அரச சிறுவர் இல்லத்தில் இடம்பெற்ற சிறுவர் நன்னடத்தை அதிகாரிகள் மற்றும் மாவட்ட சிறு வர் பாதுகாப்புக்குழு உறுப்பினர் கள் ஆகியோர் கலந்துகொண்ட சிறுவர் திட்டமிடல் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய உலக தரிசனம் அமைப்பின் சிறுவர் திட்ட இணைப்பாளர் ஸ்ரீபன் சுந்தரராஜ் இத்தகவலைத் தெரிவித்தார்.

இந்த வகையைச் சேர்ந்த பல சிறுவர்கள் இன்னமும் இனங்காணப் படாதிருப்பதகவும், அவர்களும் இனங்காணப்பட்டு உதவி வழங் கப்படுமெனவும் அவர் மேலும் தெரி வித்தார். (து-58)








இனம் தெரியாதோரால் சுட்டுக்கொலை செய்யப்பட்ட மக்கள் வங்கி முகாமையாளர் பொன்னுத்துரை கணேசமூர்த்தியின் சடலத்தையும், இக் கொலைச் சம்பவத்தைக் கண்டித்து வங்கி ஊழியர்கள் நடத்திய அமைதி ஊர்வலத்தையும், அவரது அலுவல கத்தின் முன் இக் கொலையைக் கண்டித்து கோஷம் எழுப்பப்படுவதையும் படங்களில் காணலாம்.
(படங்கள்:- திலீவின்பன்)

## இன்று ஒரு தகவல்

### தேடுதல்

ஒரு அம்மா தெருவிலே உட்கார்ந்து எதையோ தேடிக் கொண்டிருந்தார். அந்த அம்மா ஒரு சூ.ஃ.பி ஞானி! அவருடைய பெயர் ரபீயா அல் அடாவியா (Rabia Al Adawia) அந்த அம்மாவுக்கு கண்கூடத் தெளிவாகத் தெரியாது. அந்தப் பக்கமாக வந்த சில பேர் இவருக்கு உதவி செய்வதற்காக வந்தார்கள்.

"என்ன தேடிக் கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டார்கள். அதற்கு அந்த அம்மா... "அந்தக் கேள்வி அவ்வளவு முக்கியத்துவம் இல்லை! நான் தேடிக்கொண்டிருக்கிறேன் உங்களால் முடிந்தால் எனக்கு உதவலாம்!" என்றார். உதவிசெய்ய வந்தவர்களுக்கு ஆச்சரியம்.

எதைத் தேடுகிறோம் என்று தெரியாமலே இப்படி ஏன் நேரத்தை செலவழிக்கிறீர்கள்? நாங்கள் எப்படி உங்களுக்கு உதவமுடியும்..... எங்களுக்கு ஒன்றும் புரியவில்லையே ! என்றார்கள்.

சரி .... உங்களைத்திருப்தி படுத்துவதற்காக சொல்கிறேன்.... ஒரு குண்டூசி தொலைந்துவிட்டது அதைத்தான் தேடுகிறேன் என்றார் அந்த அம்மா. அதற்கப்புறம் இவர்களும் சேர்ந்து தேட ஆரம்பித்தார்கள். கொஞ்சநேரம் ஆகிவிட்டது .... ஒன்றும் கிடைக்கவில்லை .... உதவிசெய்ய வந்தவர்கள் அலுத்துப்போய்விட்டார்கள். ..... அப்புறம் கேட்டார்கள்.

இதோ பாருங்களம்மா .... இது மிகவும் பெரியதொரு .... அகலமான தெரு... அதனால் குறிப்பாக நீங்கள் எந்த இடத்தில் அந்தக் குண்டூசியைத் தொலைத்தீர்கள் அதைச் சொல்ல முடியுமா? என்றார்கள். இத்றகு அந்த அம்மா, நீங்கள் மறுபடியும் அர்த்தமில்லாத கேள்வியைக் கேட்கிறீர்கள்.... உங்களுடைய கேள்விக்கும் நான் தேடுவதற்கும் என்ன சம்பந்தம்? என்றார்.

இதைக் கேட்டதும் அவர்கள் ஒரு மாதிரியாகிவிட்டார்கள். "என்னம்மா.... நீங்க பைத்தியம் மாதிரி பேசுகிறீர்கள்?" என்றார்கள். சரி ! உங்களை மறுபடியும் திருப்திப் படுத்துவதற்காக சொல்கிறேன். அதை நான் என் வீட்டிலே தொலைத்துவிட்டேன்! என்றார்.

அப்புறம் எதற்காக இங்கே வந்து தேடிக்கொண்டிருக்கிறீர்கள் ? என்று கேட்டார்கள்.

ஏனென்றால் .... இங்கே தான் வெளிச்சம் அதிகமாக இருக்கிறது! அங்கே வீட்டுக்குள்ளே இருட்டாக இருக்கிறது... அதனாலே தான் இங்கு வந்து தேடுகிறேன் ! அப்படி என்றாராம் அந்த ஞானி.

இந்தக் கதைக்கு என்ன அர்த்தம் என்பதை ஓஷோ என்ன சொல்கிறார் தெரியுமா?

இந்தத் தேடுதல் என்பது ஒரு வியாதி. அது எம்மை சதா அலைய வைக்கும் பைத்தியமாக மாற்ற முயற்சி செய்யும் ஒருக்காலும் அது நிறைவு அடையவே அடையாது!

வாழ்வு என்பது ஒரு புரிந்துகொள்ளமுடியாத சதா இயங்கிக் கொண்டிருக்கின்ற ஒரு செயல். அதற்கு ஆரம்ப்மும் இல்லை. முடிவும் இல்லை. எதையோ தேட வேண்டும் என்ற உந்துதல் நமக்குள்ளேயே இருக்கும்: ஆனால் குறிப்பாக எதைத் தேடிக்கொண்டிருக்கிறோம் என்பது புரியாது அப்படி எதாவது ஒன்றை தேடிஅடைந்துவிட்டோம் என்று வைத்துக்கொள்ளுங்கள் உடனே ஒரு அதிருப்தி வந்துவிடும்.

அதனாலே வாழ்க்கை என்பது சலிப்பு நிறைந்தது என்கின்ற எண்ணத்தை உண்டாக்கிக் கொள்கிறோம். ஒன்றை அடைந்த பிறகு வேறு ஒன்றைத் தேட ஆரம்பித்து விடுவோம்.

ஆக இந்தத் 'தேடல்' என்பது நாம் ஒன்றை அடைந்தாலும் அடையாவிட்டாலும் தொடர்ந்து நடந்துகொண்டு தான் இருக்கும். இதற்கு முடிவே இல்லை. இந்த உண்மையை நாம் நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும் என்கிறார் அவர்.

ஏழையும் தேடுகின்றான்.பணக்காரனும் தேடுகின்றான். நோயாளியும் தேடுகின்றான்.நோயில்லாதவனும் தேடுகின்றான். அதிகாரம் உள்ளவனும் தேடுகின்றான். அதிகாரமில்லாதவனும் தேடுகின்றான். முட்டாளும் தேடுகின்றான். அறிவாளியும் தேடுகின்றான்.

ஆனால் யாரும் இதைத்தான் தேடி சாதிக்கப் போகிறோம். இதுதான் முடிவு என்று திட்டவட்டமாக சென்னதில்லை! ஒன்றை அடைந்ததும் மற்றொன்றைத் தேட ஆரம்பித்துவிடுவார்கள்.

"உங்களில் 'தேடுபவர்' உங்கள் உள்ளே தான் இருக்கிறார்.அவரைத் தேடிக்கண்டு பிடியுங்கள்!" இதுதான் ஞானிகள் நமக்குச் சொல்லுகின்ற ஆலோசனை. நம்முடைய ஆள் ஒருத்தன் சிறையில் இருந்தான் இன்னொரு கைதி அவனைப் பார்த்துக் கேட்டான்.

"உன்னை பார்ப்பதற்கு வெளியிலிருந்து யாருமே இங்கு வருவதில்லையே .... உனக்கு சொந்தக்காரர்களே கிடையாதா?" என்று கேட்டான்.

"ஏன் இல்லை.... எனக்குச் சொந்தக்காரர்கள் நிறையப் பேர் உண்டு.... அவர்கள் என்னைப் பார்க்க வராததற்குக் காரணம் வேறு!" என்றான் இவன். 'என்ன காரணம்?' என்று கேட்டான் அவன் அதற்கு இவன்

"அதற்கு என்ன காரணம் என்றால் ..... அவர்கள் எல்லோரும் உள்ளேயே இருக்கிறார்கள்!" அப்படி என்றான்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# ஊருக்கு உழைத்த துறவிகளை மெல்ல மறக்கும் தமிழ்ச்சமூகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்தை ஆரம்பிப்பதற்கு அயராது உழைத்த சென்பற்றிக்ஸ் கல்லூரியின் முன்னாள் அதிபர் (1936-1954) வண பிதா லோங் அடிகளாருடைய வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புக்கள் எதுவும் யாழ்.பொதுசன நூலகத்தில் பேணப்படவில்லை என்பது விசனத்துக்குரியதென இந் நூல் நிலையத்துக்கு வருகை தருவோர் கவலை தெரிவிக்கின்றனர்.

அயர்லாந்து தேசத்தில் லிபோறிக் என்னும் இடத்தில் பிறந்து யாழ்.மண்ணின் மைந்தனாக வாழ்ந்து வந்த அடிகளார் யாழ்ப்பாண மக்களின் அறிவுப் பசியை போக்குவதற்காக 1954.03.29 ஆம் திகதி யாழ்.பொதுநூலகத்திற்கான அடிக்கல்லை நாட்டி நூலகம் கட்டிமுடியும் வரை அயராது உழைத்தார்.

யாழ்.மக்களின கல்வி வளர்ச்சியில் மட்டுமல்லாது சமூக முன்னேற்றத்திலும் அக்கறை கொண்ட லோங் அடிகளார் 1940 ஆம் ஆண்டு 2ஆம் உலகப் போரின் போது இலங்கையின் அன்றைய தேசாதிபதி சேர் அன்றூகடிக், யுத்த சூழ்நிலைப் பொறுப்பதிகர்ரி வால்டி கொட் ஆகியோரின் அனுமதியுடன் பலாலி விமானப் படைத் தளத்தை உள்ளூர் சிவில் போக்குவரத்து நிலையமாக மாற்றி யாழ்ப்பாணம்-கொழும்பு விமான சேவையை நடாத்த உதவினார். வண.பிதா.லோங் அடிகளாரின் சேவையைக் கௌரவித்து 22.05.1990இல் இலங்கை அரசு முத்திரை ஒன்றை வெளியிட்டது.

இருப்பினும் இவர் சிந்தனையில் உதித்த நூலகத்தில் இவர் பற்றிய விபரங்கள் இன்மை தமக்கு கவலையைத் தருவதாக சென்பற்றிக்ஸ் கல்லூரி சமூகம் கவலை தெரிவிக்கிறது. தமது கல்லூரி நூலகத்தில் அடிகளாரைப் பற்றி உள்ள விபரங்கள் கூட யாழ். பொதுசன நூலகத்தில் பேணப்படாமை குறித்து அக் கல்விச் சமூகம் விசனம் தெரிவிக்கின்றது.

இந்த நூலகத்தை முழுமையாகப் பயன்படுத்தி பன்மொழிப் புலவராக விளங்கிய தாவீது அடிகள் என அழைக்கப்பட்ட வண.பிதா.ஹயசிந்து சிங்கராயர் டேவிஸ் அடிகளார் இந்த நூலகம் 1981.06.01 அன்று எரிக்கப்பட்ட போது அதை நேரில் கண்ட அக்களத்திலேயே உயிர் துறந்தார். சுவாமி ஞானப் பிரகாஸின் சீடரான இவரது "ஓம் முருகா" என்ற நூலும் சொற்பிறப்பு ஒப்பியல் அகராதியும் ஒப்பற்ற படைப்புகளாகும்.

இவரைப் பற்றி இந்த 24 வருடங்களுக்குள் அறிந்து கொள்ள முடியாமை துரதிஸ்டமே. தாவீது அடிகளுடைய தமிழ், சமூகப் பணியைப் பாராட்டி அவருக்கு இதுவரை உருவச் சிலை கூட அமைக்கப்படவில்லை. நூலகத்திற்காக உயிர் துறந்த துறவியைப் பற்றிய தகவல்கள் நூலகத்தில் கூட இல்லாமை வேதனை தரும் ஒன்றாகும்.

யாழ்.நூலகத்தில் தமிழ் ஆய்வகம் ஒன்று உருவாக்கப்பட்டு தாவீது அடிகளார் பற்றிய ஆராய்ச்சி தொடர வழிவகை செய்ய வேண்டும் என தமிழ் ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (து-36)

## ஆர்வத்துடன் இரத்ததானம் செய்யும் பாடசாலைகள்

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகள் மட்டத்தில் ஆர்வத்துடன் இரத்ததானம் செய்வதில் யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரியே முதலிடம் வகிக்கின்றது.

கடந்த மாதம் 26ஆம் திகதி இக்கல்லூரியில் நடைபெற்ற இரத்ததான முகாமில் ஆசிரியர்களும் மாணவர்களுமாக 125பேர் தன்னார்வமாக இரத்ததானம் செய்தார்கள். இதுவரை பாடசாலை மட்டத்தில் நடைபெற்ற இரத்ததான முகாம்களில் இப் பாடசாலையிலேயே அதிகள்வு இரத்ததானிகள் பங்குபற்றியிருப்பது குறிப்பிடத்தக்கது.

பாடசாலை மட்டத்தில் அதிகளவு இரத்ததானம் செய்யும் பாடசாலை என்ற விருது கடந்த வருடம் புனித பத்திரிசியார் கல்லூரிக்கு கிடைத்தமையும் குறிப்பிடத்தக்கது.



வருடா வருடம் யாழ்.மாவட்டத்திலுள்ள பெண்கள் பாடசாலைகளில் ஒழுங்காக இரத்ததானம் செய்து வரும் பாடசாலை யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை என்பது குறிப்பிடத்தக்கது.



நேற்றுமுன்தினம் இப் பாடசாயையில் நடைபெற்ற இரத்ததான முகாமில் 48மாணவிகள் இரத்ததானம் செய்துள்ளது குறிப்பிடத்தக்கது. (து-12)

## போர் நிறுத்த உடன்படிக்கையிலிருந்து அரசை விலகுமாறு வீரவன்ச கோரிக்கை

அரசாங்கம், இலங்கையில் இருந்து நோர்வே தரப்பினரை வெளியேற்ற வேண்டும் என ஜே.வி.பி. மீண்டும் கோரியுள்ளது.

தேசப்பற்றாளர் இயக்கத்தின் ஊடக மாநாடு நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்றபோது அதில் உரையாற்றிய ஜே.வி.பியின் பிரசார செயலர் விமல் வீரவன்ச, நோர்.வேயின் சர்வசேத விவகார அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் நேற்று வெளியிட்ட அறிக்கயை அவர் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

எரிக்சொல்ஹெய்ம் தமது அறிக்கையில் அரசாங்கத்திற்கு உத்தரவு பிறப்பிக்கும் வகையில் கருத்துக்களை வெளியிட்டுள்ளார். இது தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு சார்பாக தெரிவிக்கப்பட்ட கருத்து என அவர் குற்றம் சுமத்தினார். இந்த நிலையில் போர் நிறுத்த உடன்படிக்கையில் இருந்து அரசாங்கம் விலக வேண்டும் என விமல் வீரவன்ச கோரியுள்ளார்.

இந்தியாவில் இருந்து பிரித்தானியாவின் செய்தி நிறுவனம் ஒன்றின் ஊடகவியலாளர்கள் லெபனானுக்கு செல்வதை விடுத்து இலங்கைக்கு வந்துள்ளனர். லெபனானில் நடப்பதை காட்டிலும் இலங்கையில் நடைபெறுகின்றயுத்தம் அவர்களுக்கு பெரிதாக தெரிந்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மீது தாக்குதல் நடத்தப்படுவதை அந்த நிறுவனத்தால் தாங்கிக் கொள்ள முடியவில்லை என்றும் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார். (அ)

## தகவல் தொழில்நுட்பத் துறைப் பதவிகளை ஒருங்கிணைக்கப்பட்ட சேவையாக்கத் திட்டம்

(கொழும்பு)

அரசாங்கத் தகவல் தொழில்நுட்ப துறையில் பரவலாக கிடைக்கும் பதவிகளை ஒருங்கிணைக்கப்பட்ட சேவையின் கீழ் கொண்டுவர அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது.குறிப்பிட்ட தொழில்துறையில் ஈடுபட்டு வரும் ஊழியர்களின் உரிமைகளைப் பாதுகாக்க இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக அமைச்சர் சந்திர சிறி கஜதீர தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்துறையில் கணனி சார் தொழில் சங்க நடவடிக்கைகள் குறித்து தொழில் சட்டமொன்று வகுக்கப் படவுள்ளது.

அமைச்சரவை அங்கீகாரத்திற்கு இந்த விடயத்தை சமர்ப்பித்துள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ)

## இராணுவத் தளபதி மீதான தற்கொலைத் தாக்குதல்

## சந்தேக நபர்களை விசாரணை செய்வதற்கு குற்றப் புலனாய்வு பிரிவுக்கு நீதிமன்றம் அனுமதி

(கொழும்பு)

இராணுவத் தளபதி சரத் பொன்சேகா மீது மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களை விசாரணை செய்வதற்கு கொழும்பு புறக்கோட்டை மஜிஸ்திரேட் நீதிமன்றம் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு அனுமதி வழங்கியுள்ளது.

இவர்களைத் தடுத்து வைப்பதற்கான உத்தரவையும் நீதிமன்றம் விடுத்துள்ளது.கைதுசெய்யப்பட்ட 6 சந்தேக நபர்களும் பலத்த பாதுகாப்பிற்கு மத்தியில் கடந்த செவ்வாய்க்கிழமை மஜிஸ்திரேட் நீதிமன்றத்திற்கு கொண்டுவரப்பட்டனர். சந்தேக நபர்களிடமிருந்து பல முக்கிய தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டதாக புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (அ-9)

## கொடியேற்றம்

(சில்லாலை)


சில்லாலை புனித கதிரைமாதா ஆலயத்தின் வருடாந்தக் கொடியேற் றம் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணிக்கு இடம்பெற வுள்ளது.

கொடியேற்றத்தைத் தொடர்ந்து ஒன்பது நாள் நவநாட்கள் இடம் பெற்று 15ஆம் திகதி செவ்வாய்க் கிழமை திருநாள் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படவுள்ளது எனப் பங் குத் தந்தை வணக்கத்துக்குரிய யூட் நிக்சன் அடிகளார் தெரிவித் தார். (து-58)

# கர்மவீரர் காமராஜர்

முருக-தனுஷ்கோடி

## மீள்பார்வை 45



*ஜீவாவின் வாழ்க்கையில்...*

சென்னை, தாம்பரம் குடிசைவாசிகளுக்கு பட்டாதர வேண்டும் என்று கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் ப.ஜீவானந்தம் போராடிக்கொண்டிருந்த நேரம் அது. அப்போது காமராஜ் முதல் மந்திரியாக இருந்தார். தாம்பரத்தில் ஓர் ஆரம்பப் பள்ளிக் கட்டடத்தைத் திறந்து வைக்க காமராஜ் அங்கு சென்றார். அந்த ஆரம்பப் பள்ளிக்குப் போகும் வழியில்தான் ஜீவாவின் வீடு இருந்தது. காரை நிறுத்தச் சொன்னார் காமராஜ். ஜீவாவின் வீட்டிற்குள் நுழைந்தார். அது ஒரு குடிசை வீடு. மேலே கூரை கூடப் பிய்ந்துவிட்டிருந்தது.

அந்தநேரத்தில் அங்கு காமராஜை ஜீவா எதிர்பார்க்கவில்லை. என்ன இந்த வீட்டில் இருக்கின்றீர்களே? என்றார் காமராஜ். எல்லோரையும் போலத்தானே நானும் என்றார் ஜீவா. காமராஜ் கண் கலங்கினார். ஆரம்பப் பள்ளிக்கூடத்தை திறந்துவைக்க வந்தேன். வரும் வழியில் உங்களையும் இங்கு பார்க்க வந்தேன் என்றார் காமராஜ்.

அந்தப் பள்ளிக்கூடத்திற்கு அடிக்கல் நாட்டியவர் ஜீவா. இதை ஜீவா சொல்லத் தெரிந்துகொண்ட காமராஜ், அவரையும் விழாவுக்கு அழைத்துச் சென்றார். விழா மேடையில் காமராஜையும் ஜீவாவையும் பார்த்த மக்கள் கூட்டம் கரகோஷம் செய்தது. விழா முடிந்ததும் இருவரும் விடைபெற்ற காட்சி பார்ப்போர் மனத்தை உருக்கச் செய்தது.

கொஞ்சக் காலம் கழித்து ஜீவாவின் துணைவியாருக்கு ஓர் உத்தியோகம் கிடைத்தது. அந்த உத்தியோகம் காமராஜால் தான் கிடைத்தது எனப் பின்னால் தெரியவந்தது. ஜீவா ஒரு நல்ல வீட்டில் இருக்க வேண்டும் என்று காமராஜ் ஆசைப்பட்டார். அவரை அழைத்துப் பேசினார். அதற்கு ஜீவா ஒப்புக்கொண்டார். உடனே அதற்கான ஏற்பாடுகளை துரிதமாக செய்து உதவ முன்வந்தார் காமராஜ்.

நோய்வாய்ப்பட்டு சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் ஜீவா சேர்க்கப்பட்டிருந்தார். அங்கு அவர் அமரரானார். ஜீவாவின் ஆவி பிரியுமுன்னால் அவர் சொன்ன கடைசி வார்த்தைகள், காமராஜுக்கு ரெலிபோன் பண்ணுங்கள்!

உயிர் பிரியும் கடைசித் தருணத்திலும் ஜீவாவின் உள்ளத்தில் காமராஜ் இருந்தார். ஏன்? நாட்டைக் காமராஜ் சோஷலிசப் பாதையில் நடத்திச் செல்கிறார். அவரே அதற்கு உதாரண புருஷராகவும் விளங்குகிறார் என்பதால் தான், ஜீவாவின் நினைவில் காமராஜ் நிறைந்திருந்தார்.

*பிடித்த புத்தகங்கள்*

காந்திஜியின் "சத்தியசோதனை" மைக்கேல் பிரிட்சலின், "நேருஜியின் அரசியல் வாழ்க்கை", லாஸ்கியின் "அரசியல் இலக்கணம், "கம்பராமாயணம்" ஆகியவை காமராஜிற்கு பிடித்தமான புத்தகங்கள். படித்த புத்தகங்களில், தனது சிந்தனையை உருவாக்கி வளர்த்த புத்தகங்களும் இவைகள் தான் என்று காமராஜ் ஒரு தடவை கூறினார். ஒரு தடவை காமராஜ் டெல்லியில் இருந்தபோது தமிழ்ப் பத்திரிகையாளர் ஒருவர் அவரை சந்தித்தார். அவரை உட்காருங்கள் என வரவேற்றவாறே, தலைவர் தமது பெட்டியிலிருந்த சலவைத் துணிகளை ஒவ்வொன்றாக எடுத்துக் கீழே வைத்தார். அப்போது தலைவர் பெட்டியை அவர் கூர்ந்து பார்த்தார். அவதற்குள் "Inside Africa", "Ends and Means" சி.வி.காண்டேகரின் "சிந்தனைச் செல்வம்" ஆகிய புத்தகங்களும், "டைம்", "நியூஸ் வீக்" பத்திரிகைகளும் இருப்பதை அவர் தெரிந்து கொண்டார்.

ஒரு தடவை இரவு பத்து மணிக்கு காங்கிரஸ் கமிட்டி அலுவலகத்திற்கு ஒரு தந்தி காமராஜ் பெயருக்கு வந்தது. தந்தியை வாங்கியவர் அதைப் பிரித்து பார்த்தார். கவர்னர் ஜெனரலாக இருந்த ராஜாஜி செய்தி அனுப்பியிருந்தார். "எல்லோரும் ஒற்றுமையாக இருந்து தமிழ்நாட்டுக்கு பணி புரியுங்கள், வாழ்த்துக்கள்" என்று தந்தியில் வாசகம் காணப்பட்டது.

1948ஆம் ஆண்டில் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் சட்டசபை காங்கிரஸ்கட்சித் தலைவராக (முதல் மந்திரியாக) தேர்ந்தெடுக்கப்பட்ட தினத்தில் இது நடந்தது. அப்போது காங்கிரஸ் கமிட்டி அலுவலகம் 8, நரசிங்கபுரம் தெருவில் இருந்தது.

தந்தியைப் பார்த்ததும் காமராஜுக்கு போன் செய்தார் அவர். காமராஜே போனை எடுத்தார்.

"ராஜாஜியிடமிருந்து செய்தி வந்திருக்கிறது பிரித்துப் பார்த்து சொல்லட்டுமா?" என்று கேட்டார். மூன்று நான்கு விநாடிகள் கழித்து சரி சொல் என்று சொன்னார் காமராஜ். தந்தி செய்தியை சொன்னதும் ரெலிபோனை காமராஜ் வைத்துவிட்டார்.

மறுநாள் கட்சி அலுவலகத்திற்குப் போனார் காமராஜ் தந்தி வந்ததாக ரெலிபோனில் சொன்னவரைக் கூப்பிட்டார். "தந்தியைப் பிரிக்காமலேயே யார் கொடுத்த தந்தி என்று உன்னால் எப்படி சொல்லமுடியும்?" என்று காமராஜ் அவரிடம்கேட்டார் அவ்வளவுதான் அவர் அதிர்ந்து விட்டார்.

சென்னை மாவட்ட காங்கிரஸ் கட்சி தலைவராக இருந்த ராமதாஸ், பல தடவை காமராஜிடம் அடிபட்டிருக்கின்றார். தேர்தல் நேரங்களில் ஒரு கூட்டம் முடிந்து இன்னொரு கூட்டத்திற்கு செல்லும் போது, "எங்கே ராமதாஸ்?" என்பார். ராமதாஸ் ஓடிவருவார். "முன்னால் ஏறு" என்பார். ராமதாஸும் காமராஜ் காரின் முன்சீட்டில் டிரைவருக்கு பக்கத்தில் ஏறிக்கொள்வார். ராமதாஸ் வழிகாட்டிக் கொண்டே போவார். திடீரென கொத்து கொத்தென காமராஜ் ராமதாஸின் முதுகில் வாங்கிவிடுவார். இவ்வளவு குறுகிய இடத்தில் கூட்டிச் செல்கிறாயே, அந்தப் பக்கமாகப் போனால் தடங்கலின்றிப் போகலாம் அல்லவா என்று கோபத்தில் அடித்துவிடுவார்.

கடைசியில் நிகழ்ச்சிகள் எல்லாம் முடிந்ததும் கூப்பிட்டு, நாளை 6 மணிக்கு மேல் புறப்படலாம் என்று கூறிவிட்டு வீட்டுக்கு திரும்புவார். காமராஜின் கார் மறைந்ததும், ராமதாஸின் நண்பர்கள் அவரிடம் "என்ன அடி பலமோ?" என்று கேட்பதுண்டு. மறுநாள், ராமதாஸ் தலைவர் வீட்டிற்கு சென்று அவரை நிகழ்ச்சிகளுக்கு அழைக்கப் போவார்.

என்னமோ போ நேற்று அடிச்சிட்டேன் இல்லே; இன்றைக்கு அடி கிடைக்காமல் பார்த்துக்கோ! என்றாவது காரில் ஏறி பொதுக் கூட்டங் களுக்கு கிளம்புவார். தலைவரிடம் பட்ட அடியை ராமதாஸ் பெருமையாக எண்ணினார். அது அவரையும் ஒரு பொறுப்புள்ள பதவிக்கு உயர்த்திற்று. அந்தக் காங்கிரஸ் தொண்டருக்கு, உழைப் பாளிக்கு பெரும் தலைவர் காமராஜ் நெஞ்சில் ஓர் இடம் எப்போதும் இருந்து கொண்டேயிருந்தது.

சென்னையில் ஹரிஜன் சிறுவர் சிறுமியர் தங்கியிருந்தவீடு ஒன்று திடீரென வீட்டுக்காரரால் காலிசெய்யப்பட்டது. அந்தக் குழந்தைகள் நடுத்தெருவில் நின்றன. உடனே குமாரி அனுசூயா என்ற சகோதரி இதுகுறித்து காமராஜிடம் சொன்னார். உடனே காமராஜ் அந்த ஹரிஜன் சிறுவர் சிறுமிக்கு என ஒரு விடுதியே நிறுவி, அதன்போஷகராக 20ஆண்டுகள், கடைசி மூச்சு உள்ளவரை இருந்தார்.

(தொடரும்)



## கந்தரோடை வீரகத்தி விநாயகர் ஆலய அலங்கார உற்சவம்

ஏழாம் திருவிழா 05.08.2006

### அருளொளி தரும் ஆலடி விநாயகன்

அருளொளி தருபவன் ஆலடி உறைபவன்
வருமடி யாரிடர் வதையுறச் செய்பவன்
மருப்பது வொடித்துமே மாகதை எழுதிய
தருமவர் கணபதி தந்திடு அருளதை

எஸ்.ஸ்ரீகுமரன்

## வேலைக்குச் சென்ற இருவரைக் காணவில்லை

வேலைக்குச்செல்வதாகக் கூறிச் சென்ற இரு இளைஞர்களைக் காணவில்லையெனமனிதஉரிமைகள் ஆணைக்குழுவிடம் அவர்களது உறவினர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பழம் வீதி, ஆனைக்கோட்டையைச் சேர்ந்த கடற்றொழில் புரிபவரான ஆறுமுகம் யோகநாதன் (வயது 43) கடந்த மாதம் 26 ஆம் திகதி மாத்தளைக்குச் சென்றதாகவும், 30ஆம் திகதி யாழ்ப்பாணம் வருவதாக அவரது மனைவியிடம் தொலைபேசியில் தெரிவித்ததாகவும், அதன்பின் அவரைப் பற்றிய தகவல் எதுவும் இல்லை என்றும் மனிதஉரிமைகள் ஆணைக்குழுவிடம் அவரது மனைவி நேற்று முன்தினம் முறைப் பாடு செய்துள்ளார்.

இதேவேளை உடுப்பிட்டி சந்தை வீதியைச் சேர்ந்த மேசன்வேலை செய்பவரான சுப்பிரமணியம் சதீஸ்குமார் (வயது-15) கடந்த மாதம் 22 ஆம் திகதி வேலைக்கென்று வீட்டிலிருந்து புறப்பட்டவர் வீடு திரும்பவில்லையென அவரது தாயார் கடந்த செவ்வாய்க்கிழமை மனித உரிமை கள் ஆணைக் குழு விடம் முறைப்பாடு செய்துள்ளார். (து-133)

## சிறுவர் சேமிப்பின் மூலம் பெரியவர்களுக்கும் உதவி

(யாழ்ப்பாணம்)

பிள்ளைகளின் பெயரில் ஆரம்பிக்கும் சேமிப்புக் கணக்கின் மூலம் பெற்றோர்களும் பயனடையக் கூடியதான "ரஜ தருவோ" என்ற சேமிப்புக் கணக்குத் திட்டமொன்று "த பினான்ஸ்" நிறுவனத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் படி கணக்கு மீதியின் படி பதிவுக் குவியல்களை பெற்றுக்கொள்ள வாய்ப்புண்டு. பெற்றோர்களுக்கு 5இலட்சம் ரூபா பெறுமதியான ஆயுள் காப்புறுதி வழங்கப்படும். சேமிப்புக் கணக்கை வைத்திருக்கும் பிள்ளை 12 வயதினை அடையும்போது கணனியொன்றைக் கொள்வனவு செய்வதற்கும் நிதியுதவி பெறும் உரித்துடையவராவார்.

உயர்கல்விக்கு தேவையான நிதி வசதி வழங்கப்படுவதுடன் புதிய வீடொன்றை அல்லது காணியொன்றை சொந்தமாக்கிக் கொள்ளவும், மோட்டார் வாகனமொன்றைச் சொந்தமாக்கிக் கொள்ளவும் இத் திட்டம் உதவிசெய்யும்.

"ஸ்தானவாசி" என்ற கடன் திட்டத்தின் மூலம் சுயதொழில் ஒன்றை ஆரம்பிக்கவும் கடன் உதவி வழங்கப்படும். (து-133)

## "எல்லோரும் ஒன்றாய்" நிகழ்வு

(சில்லாலை)

சிறுவர் இல்லங்களிலிருந்து குடும்பத்தினருடன் பிள்ளைகளை மீளிணைத்தல் செயற் திட்டத்தின் கீழ் 3ஆம் கட்டமாக மீளிணைக்கப்பட்ட சிறுவர்களுக்கான நிகழ்வு நாளை காலை 10.00மணி முதல் மாலை 3.30மணி வரை யாழ். ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள தொடர்பகம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்.மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுவினரால் சிறுவர் பாதுகாப்பு இலங்கையின் அனுசரணையுடன் நடாத்தப்படவுள்ள இந் நிகழ்வில் மீளிணைக்கப்பட்ட பிள்ளைளும், அவர்களின் பெற்றோர், பாதுகாவலரும் கலந்தகொள்ளவுள்ளனர். (அ-58)

## மருத மடுமாதா ஆவணித் திருவிழா

(மன்னார்)

மன்னார் மருதமடுப் பகுதியிலுள்ளபுனித-செபமாலை அன்னை யாத்திரைத்தல ஆவணி விழா நாளை ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி 15 ஆம் திகதி செவ்வாய்க் கிழமையுடன் நிறைவு பெறுகின்றது. (து-72)



டென்மார்க் செஞ்சிலுவைச் சங்கமும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கமும் இணைந்து பருத்தித்துறை சித்திவிநாயகர் பாடசாலையில் தரம் 6, 7, 8 மாணவர்களுக்கு நடத்திய பாடசாலை சார் சுகாதாரமும் சமூக உளவியலும் செயற் திட்டப் பூர்த்திவிழா நிகழ்வில் கலந்துகொண்ட செல்வி கெறின் எரிக்சன் மங்களவிளக்கேற்றுவதையும், அருகில் பாடசாலை அதிபர் இ.நாகேந்திரராஜா மற்றும் ஆசிரியர்களையும் படத்தில் காணலாம்.

(படம்:-கற்கோவளம் நிருபர்)

# உலக நாடுகளின் எதிர்ப்புக்கு —பணிந்தது இஸ்ரேல்—

(ஜெருசலேம்)

உலக நாடுகளின் கடுமையான எதிர்ப்பால் லெபனான் மீதான வான்வழித் தாக்குதலை இஸ்ரேல் 48 மணி நேரத்துக்கு நிறுத்திவைத்துள்ளது. இதற்கிடையே ஒரு வாரத்திற்குள் போர் நிறுத்தம் ஏற்படும் என அமெரிக்க வெளியுறவு அமைச்சர் காண்டோலிசா ரைஸ் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

லெபனானை மையமாகக் கொண்டு இயங்கும் ஹிஸ்புல்லா தீவிரவாத இயக்கத்திற்கும் இஸ்ரேல் இராணுவத்தினருக்கும் இடையே கடந்த சிலநாட்களுக்கு முன்னர் கடுமையான துப்பாக்கி சண்டை நடந்தது. இந்த சண்டையில் இஸ்ரேல் இராணுவத்தினர் எட்டுபேர் சுட்டுக்கொல்லப்பட்டனர். இரண்டு இராணுவ வீரர்களை ஹிஸ்புல்லா தீவிரவாதிகள் கடத்திச்சென்றுவிட்டனர். இதற்கு பதிலடியாக இஸ்ரேல் இராணுவத்தினர் லெபனான் மீது வான்வழித்தாக்குதல் நடத்தினர். விமானங்கள் மூலம் குண்டுகளை வீசி தீவிரவாதிகளின் நிலைகளைத் தகர்த்தனர். இரு தரப்பினருக்கும் இடையேயான இந்த சண்டை 20 நாட்களாக நடந்து வருகிறது.

இதன் உச்சக்கட்டமாக நேற்று முன் தினம் லெபனானின் தெற்குப் பகுதியில் உள்ள குவானா என்ற கிராமம் மீது இஸ்ரேல் போர் விமானங்கள் சரமாரியாக குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தியது. இந்த சம்பவத்தில் 60 அப்பாவி பொதுமக்கள் உயிரிழந்தனர். பெரும்பாலும் கொல்லப்பட்டது ஒன்றும் அறியாத சிறு குழந்தைகளே.

இரக்கமற்ற இந்த தாக்குதலால் உலக நாடுகளின் கடுமையான கண்டனத்தை இஸ்ரேல் எதிர்கொண்டது. இந்நிலையில் நேற்று இஸ்ரேலிய பிரதமர் இகுத் ஒல்மெட்டை அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கண்டோலிசா ரைஸ் சந்தித்துப் பேசினார். லெபனான் மீதான தாக்குதல்களை கைவிடும்படி கேட்டுக்கொண்டார். இதையடுத்து இஸ்ரேல் பிரதமர் அலுவலக செய்தித் தொடர்பாளர் கூறுகையில் குவானா கிராம தாக்குதல் சம்பவத்தில் ஏற்பட்ட சோகம் சரியாகும் வரை அடுத்த 48 மணிநேரத்திற்கு லெபனான் மீது எந்தவிதமான வான்வழித் தாக்குதல் நடத்தப்படமாட்டோம் என்றார்.

இதற்கிடையே ஐ.நா.வின் பாதுகாப்பு கவுன்சில் கூட்டம் அவசரமாக நேற்று முன் தினம் கூடியது. இக்கூட்டத்தில் குவானா கிராமம் மீது இஸ்ரேல் இராணுவத்தினர் நடத்திய தாக்குதலுக்கு கடுமையான கண்டனம் தெரிவிக்கப்பட்டது. தாமதம் ஏதுமின்றி இஸ்ரேல் உடனடியாக போர்நிறுத்த்தை அறிவிக்க வேண்டும் என அமெரிக்கா வலியுறுத்தியது.



தாய்லாந்த் தலைநகர் பாங்காக்கில் பாதாள ரயில்களில் சோதனை செய்வதற்காக, பிரிட்டன் நிபுணர்களால் பயிற்சி அளிக்கப்பட்ட மோப்ப நாய்கள் தயாராக இருக்கிறது

# காஸ்ட்ரோ சகோதரர்கள் எங்கே?

## கியூபா மக்கள் குழப்பம்

ஹவானா ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ள கியூபாவில் பிடல் காஸ்ட்ரோவும் தற்காலிக அதிபராக பொறுப்பு ஏற்றுக்கொண்ட அவரது தம்பி ரவூல் காஸ்ட்ரோவும் எங்கே உள்ளனர் என்பது ரகசியமாக வைக்கப்பட்டுள்ளது. கியூபா நாட்டின் அதிபராக 50 ஆண்டுகளாக இருந்து வந்த பிடல் காஸ்ட்ரோவின் குடல் பகுதியில் இரத்த கசிவு ஏற்பட்டதையடுத்து அதிபர் பொறுப்பை தனது தம்பியும் இராணுவ அமைச்சராக இருந்து வந்தவருமான ரவூல் காஸ்ட்ரோவிடம் பிடல் காஸ்ட்ரோ தற்காலிகமாக ஒப்படைத்தார். எனினும் அங்கு தொடர்ந்து மர்மம் நீடித்து வருகிறது. அறுவைச்சிகிச்சை முடிந்த பிடல் காஸ்ட்ரோ நலமுடன் உள்ளார் என்ற தகவல் மட்டுமே வெளியானது.

ஆனால் அவரது போட்டோக்களோ டி.வி ஒளிப்பதிவோ வெளியாகவில்லை. அதே போல் புதிய அதிபர் ரவூல் காஸ்ட் ரோவும் எங்கே இருக்கிறார் என்பது தெரியவில்லை அதிபராக பதவிஏற்ற பின்அவர் நாட்டு மக்களுக்கு இன்னும் உரையாற்ற வில்லை. வெளிப்படையாக மக்களை இன்னும் சந்திக்கவில்லை எனவே கியூபா மக்கள் குழப்பத்தில் உள்ளனர். (து)




# லெபனானில் கொல்லப்பட்டோர் தொகை 900

## காயமடைந்தோர் தொகை 3 ஆயிரம்

இஸ்ரேல் லெபனான் மீது தாக்குதலை ஆரம்பித்தது முதல் இதுவரை லெபனானில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை தொள்ளாயிரத்தையும் தாண்டியுள்ளதாக லெபனானின் பிரதமர் போவும் சினியோரா தெரிவித்துள்ளார்.

மேலும் மூவாயிரம் பேர் காயமடைந்துள்ளதாகவும் பாதிக்கப்பட்டவர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் சிறார்கள் என்றும் அவர் கூறினார். அத்தோடு பத்துஇலட்சத் துக்கும் அதிகமான மக்கள்–அதாவது லெபனானின் மொத்த சனத்தொகையில் கால்வாசிப் பேர் இடம்பெயர்ந்துள்ளதாகவும் அவர் தெரிவித் துள்ளார்.



மலேசியாவில் நடக்கும் இஸ்லாமிய நாடுகளின் கூட்டமைப்பின் மாநாட்டுக்கு அவர் அனுப்பிவைத்த வீடியோ செய்தி ஒன்றிலேய அவர் இந்தத் தகவல்களை அறிவித்துள்ளார். ஐக்கிய நாடுகள் சபை ஒரு அவசர போர் நிறுத்தத்தை அமுல் படுத்தி இஸ்ரேலால் லெபனானில் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள் என்று தம்மால் கூறப்படுபவை குறித்து புலன் விசாரணை.நடத்தப்படவேண்டும் என்று அந்த மாநாடு நிர்ப்பந்தித்துள்ளது. (து)

# லெபனானின் அமைதிக்காக இரு கட்டத்திட்டம்

## ஐ.நா.பாதுகாப்புச் சபை ஆலோசனை

லெபனான் மோதல்களை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான இரண்டு கட்டத் திட்டம் குறித்து நியோர்க்கில் ஐக்கிய நாடுகள் இடைக்கால போர் நிறுத்தம் ஒன்றை கோருவதற்கான தீர்மான பிரேரணை குறித்து பிரிட்டன்த பிரான்ஸ் மற்றும் அமெரிக்கா ஆகியவை ஒரு உடன்பாட்டை நெருங்கி யுள்ளதாக இராஜ தந்திரிகள் கூறுகிறார்கள்.



பா்துகாப்புச் சபையின் 15 உறுப்பு நாடுகள் ஆலோசித்து வருகிறார்கள்.

ஒரு சர்வதேச அமைதிப் படையை அங்கு நிறுத்துவது உட்பட ஒரு நீண்ட கால தீர்வு ஒன்றுக்கு சர்வதேச ஆதரவைப் பெறுவதே அதன் இரண்டாவது கட்டமாக இருக்கும். லெபனானின் உடனடி மோதல் நிறுத்தத்தை கோருவதற்கான ஐக்கிய நாடுகள் சபைத் தீர்மானம் குறித்து உடன்பாடு சில நாட்களில் ஏற் படக்கூடும் என்று பிரிட்டிஸ் பிரதமர் டொனி பிளயர் தெரிவித்துள்ளார். (அ)

# ஒரு பகுதியில் வெள்ளம் மறு பகுதியில் வரட்சி

(பெய்ஜிங்)

சீனாவின் ஒரு பகுதியில் வெள்ளப் பெருக்கால் மக்கள் அவதியுறும் நிலையில் பிற பகுதிகளிலுள்ள 50 இலட்சம் பேர் வறட்சியால் கடும் தண்ணீர் பஞ்சத்துக்கு உள்ளாகும் நிலை ஏற்பட்டுள்ளது.

சீனாவின் தென்மேற்குப் பகுதியில் மழை பெய்ததால் 13 இலட்சம் மக்களுக்கு குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. 9 இலட்சம் கால் நடைகளும் இலட்சக்கணக்கான ஏக்கர் பயிர்கள் பாதிப்படைந்துள்ளன. வியாழக்கிழமை முதல் ஹைனான் தீவுகளில் புயலுடன் கூடிய கன மழை பெய்யும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது. (து)



ஹாங்காங்கில் திடீரென புயல் காற்று வீசத் தொடங்கியதால் அங்கு புயல் எச்சரிக்கை கொடுக்கப்பட்டது

# விளையாடிக் கொண்டிருந்த 12 பேர் கோரப்பலி

(பக்தாத்)

ஈராக் தலைநகர் பக்தாத்தில் உள்ள விளையாட்டு மைதானத்தில் மேற்கொள்ளப்பட்ட குண்டுத்தாக்குதலில் அங்கு விளையாடிக்கொண்டிருந்த 12பேர் கொல்லப்பட்டுள்ளனர். பலர் காயமடைந்துள்ளனர். இதில் அதிகமானவர்கள் சிறுவர் கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஷியாப் பிரிவின் முஸ்லிம்கள் அதிகமாக வாழும் அப்பகுதியில் உள்ள உதைபந்தாட்ட மைதானத்தின் மையப்பகுதியிலேயே குண்டுவெடித்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

அமெரிக்க கூட்டுப்படைகளிடம் இருந்து ஈராக்கின் முழுப்பாதுகாப்புப் பொறுப்பையும் ஈராக் படைகள் ஏற்கவுள்ளதாக ஈராக் ஜனாதிபதி தெரிவித்த சில மணி நேரங்களில் இத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது. (து–9)

உண்மையான மகிழ்ச்சிகள் நிறைந்ததுபோல் ஆனால், உண்மையில் ஊனியமரன வாழ்க்கை உலகில் ஒன்று இருக்கிறது என்றால்-அதுதான் அரசியல் வாழ்க்கையாகும்.

-இங்கர்சால்

வலம்புரி

# முஸ்லிம் கட்சிகள் பொறுப்புடன் செயற்பட வேண்டும்

மூதூரில் படையினர் நடத்திய ஆட்லறித் தாக்குதலில் சுமார் முப்பது முஸ்லிம் மக்கள் பலியாகியுள்ளனர். எண்பதிற்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

மூதூரில் மூண்டுள்ள போரையடுத்து பாடசாலைகளில் தங்கியிருந்த முஸ்லிம்களே இவ்விதம் பலியாகியும் படுகாயத்திற்குட்பட்டும் உள்ளனர்.

போர் நடக்கும் இடங்களில் பொதுமக்களின் உயிருக்கு உத்தரவாதம் அளிப்பது சகலரதும் கடமையாகும்.

அதிலும் பாடசாலைகள், ஆலயங்கள், வைத்தியசாலைகள் உள்ளிட்ட பொதுஇடங்கள் மீதான தாக்குதல்கள் நிறுத்தப்பட வேண்டும்.

எனினும் கடந்த காலங்களிலும் வட பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதல்களில் தேவாலயங்கள், வைத்தியசாலைகள், ஆலயங்கள் இலக்கு வைக்கப்பட்டன. இதனால் நூற்றுக் கணக்கான பொது மக்கள் பலியாகிப் போயினர்.

தாக்குதல் இடம்பெறும்போது ஆலயங்கள் மற்றும் பாடசாலைகளை பாதுகாப்பான இடமாகக் கருதி மக்கள் அங்கு தஞ்சமடைவது வழக்கம். இது உலகம் முழுவதிலும் இருக்கக் கூடிய நடைமுறையே.

எனினும் இங்கு மட்டும் தேவாலயங்கள், பாடசாலைகள் மற்றும் பொது இடங்கள்மீது குண்டுத் தாக்குதல் நடத்தப்படுவது கண்டிக்கப்பட வேண்டிய விடயமாகும்.

இத் தாக்குதல்கள் தமிழர்கள் மீது நடத்தப்பட்டதால்-முஸ்லிம் கட்சிகள் மற்றும் அதனைப் பிரதிநிதிப்படுத்தும் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் மௌனமாகவே இருந்தனர்.

தற்போது தமிழர்கள் என்ற இனத்துவ எல்லை கடந்து முஸ்லிம்கள் மீதும் ஆட்லறித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இங்குதான் 'நியாயமாக நடத்தல்' என்ற சொற்பதம் முஸ்லிம் கட்சிகளுக்கு முன்னால் விஷ்வரூபம் எடுத்திருக்கின்றது.

தமிழர்கள் என்ற ஒரே காரணத்திற்காக, ஆட்சியாளர்கள் நடத்திய தாக்குதல்களின்போது அதற்குள் சுயலாபம் தேடிய முஸ்லிம் கட்சிகள் இப்போது உண்மை நிலைப் புரிந்து கொண்டிருக்கும்.

தனக்குத் தனக்கு இழப்பு வருகின்றபோது தான் யுத்தத்தின்-குண்டுத் தாக்குதலின் கொடூரம் உணரப்படுகிறது.

அவ்வளவில் மூதூரில் பாடசாலைகள்மீது நடத்தப்பட்ட ஆட்லறித் தாக்குதலை-சுமார் முப்பது அப்பாவி முஸ்லிம் மக்கள் உயிரிழந்தமையை நல்லதோர் பட்டறிவாகக் கொண்டு முஸ்லிம் கட்சிகள் பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

குறிப்பாக ஆளுந்தரப்பிற்கு ஆதரவு தெரிவித்து அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக் கொள்ளும் வழமையை முஸ்லிம்கள் கைவிட வேண்டும்.

சிறுபான்மையினங்களுக்கு இந்த மண்ணில் இருக்கக் கூடிய துன்ப துயரங்களை போக்கும் வகையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும்மாறு முஸ்லிம் கட்சிகள் அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். இது காலத்தின் கட்டாயமாகும்.

# வறுமையை ஒழிக்க முடியாவிட்டாலும் தவிர்க்க முடியும்-அரச அதிபர் கே.கணேஷ்



"வறுமையை ஒழிக்க முடியாது. ஆனால் வறுமையைத் தவிக்கமுடியும்''. தமிழ் மக்கள் யாவரும் சொந்தக்காலில் நிற்க வேண்டும். எவ்வளவு சிரமங்கள் ஏற்பட்டாலும் தம்மை ஒழுங்குபடுத்தி கொள்வதுடன் நிவாரணம் என்ற சிந்தனையை அகற்ற வேண்டும்.

நேற்று முன்தினம் புத்தூர் கிழக்கு ஸ்ரீகுமரகுருபரன் சனசமூக நிலையத்தில் நியாப் வடக்கு -கிழக்கு நீர்ப்பாசன விவசாயத் திட்டத்தின் வாழ்வாதார உதவித்திட்ட மற்றும் இலங்கை வங்கியின் வறுமைஒழிப்புக் கடன் திட்டத்தின் கீழான தொழில்முயற்சிக்கான கடன் வழங்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ். அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்தார். இத்திட்டம் ஒருவியாபாரத்திட்டமாக யாழ். மாவட்டத்தில் முதல் முறையாகபுத்தூர் கிழக்கு பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் யாழ். மாவட்டத்தில் ஏனைய கிராமத்துக்கு முன்னுதாரணமாக திகழவேண்டும். இந்த வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக நடாத்த, சகல திணைக்களங்களும் இவற்றுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் பொறுப்பேற்றுக் கொள்வதுடன் மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கமும் இந்தப் பணியினை சிறந்த முறையில் நடத்த முன்வந்துள்ளது. இத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும்போது ஒருவர் விடும் பிழை முழுத் திட்டத்தையே பாதிக்கும் என்பதை எல்லோரும் உணர்ந்து கொள்ள வேண்டும் என அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டார்.

இத்திட்டம் தொடர்பாக பெறும்கடனைஉரியமுறையில் உரியகாலப்பகுதியில் செலுத்துதல் வேண்டும் . சிறிய நான்கு பிரதேச செயலகத்தினை மட்டும் கொண்ட வவுனியா மாவட்டத்தில் இத்திட்டம் சிறந்த முறையில் நடைபெறு கிறது. விவசாய நடவடிக்கைகளிலும் உயர்வாக உள்ள யாழ். மாவட்டத்தில் இத்திட்டம் சிறந்த பயனை பெற்றுத்தரும். இத் திட்டம் மாதர் சங்கத்தின் ஊடாக நடைமுறைப்படுத்தப் படுவது பெருமைக்குரிய ஒன்றாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (து-133)

# தற்போதைய மோதல்களுக்கு புலிகளே காரணம் இலங்கைத் துணைத் தூதர் சென்னையில் தெரிவிப்பு



மாவிலாறு அணையை ஒட்டி தற்போது விடுதலைப்புலிகளுக்கும், இராணுவத்தினருக்குமிடையே நடைபெற்று வரும் மோதலுக்கு விடுதலைப் புலிகளே காரணம் என்று சென்னையில் இருக்கும் இந்தியாவுக்கான இலங்கையின் துணைத் தூதர் பி.எம்.அம்சா குற்றம்சாட்டியுள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களை சந்தித்த அவர் மாவிலாறு அணையை விடுதலைப் புலிகள் திறக்க முன்வந்தால் உடனடியாக இந்த மோதல் முடிவுக்கு வரும் என்று கூறினார்.

இலங்கை காவல்துறையினர் 44பேருக்கு கோயம்புத்தூரில் இருக்கும் இந்திய அரசின் மத்திய பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி அளிக்கப்படுவதற்கு தமிழக அரசியல் கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்திருப்பது பற்றி அவரிடம் கேட்டதற்கு அந்த பயிற்சி இராணுவப் பயிற்சி அல்ல என்றும், பெருங்கூட்டமாக மக்கள் கூடும்போது பலதரம் ஏற்படாமல் தடுப்பது பற்றியே இந்தப் பயிற்சி என்றும், இதை அரசியல் கட்சிகள் அவ்வளவு தூரம் பெரிதுபடுத்தத்தேவையில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

தமிழ்நாட்டின் அரசியல் கட்சிகள், இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுப்பது தொடர்பான கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த அம்சா, தமிழக மக்கள் இலங்கைத் தமிழர்கள் மீது கரிசனை காட்டுவதில் எந்தப் பிரச்சினையும் இல்லை என்றும், அதேவேளை அவர்களின் கரிசனை என்பது ஒரு பயங்கரவாத குழுவுக்கான கரிசனையாக இருக்கக் கூடாதென்றும் கூறினார். (அ)

# பாதுகாப்புப் படையின் நடவடிக்கைக்கு பாராட்டு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் செயல்களால் அல்லல்படும் மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு அரசாங்கம் கட்டுப்பட்டுள்ளது என மூத்த பௌத்த மதகுரு ஒருவர் தெரிவித்துள்ளார்.

மாவிலாறு அணைக்கட்டு மூடப்பட்டுள்ளதால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் பாதுகாப்பையும், உரிமைகளையும் உறுதிசெய்வதற்கு பாதுகாப்புத் தரப்புக்கள் எடுத்துள்ள நடவடிக்கைகள் வரவேற்கத்தக்கவை என்று அஸ்கிரிய பீடத்தைச் சேர்ந்த சங்கைக்குரிய பேராசிரியர் வணக்கவே தம்முலவ்த தேரர் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் பிரச்சினைகளைப் பேசித் தீர்க்காமல் மூவின மக்களையும் கஷ்டத்தில் ஆழ்த்தும் குற்றச் செயல்களை மேற்கொண்டு வருகின்றது. இவற்றைக் கட்டுப்படுத்துவது பொறுப்புள்ள அரசாங்கத்தின் கடமையாகுமென்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (து-9)

# வன்மையாகக் கண்டிக்கின்றோம்

மக்கள் வங்கி, காங்கேசன்துறைக் கிளையின் முகாமையாளர் பொன். கணேஷமூர்த்தி கடமைக்காக புறப்பட்டு வரும் வழியில் சுட்டுக்கொலை செய்யப்பட்டமையைக் கண்டித்து யாழ்.மாவட்ட வங்கியாளர் சங்கம் ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளது.

அவ் அறிக்கையில், மக்கள் வங்கி, காங்கேசன்துறைக் கிளை முகாமையாளரான பொன். கணேஷமூர்த்தி நேற்றுக் காலை தனது வீட்டிலிருந்து கடமைக்காக புறப்பட்டு வரும் வழியில் இனந்தெரியாதோரால் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டதை வங்கிச் சமூகமாகிய நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். இப்படியான செயல்கள் வங்கியாளர்களையும், பொது மக்களையும் மிகவும் பாதித்து நிர்வாக சீர்குலைவுகளை ஏற்படுத்த வழிவகுக்கும். இதற்கு முன்பும் இலங்கை வங்கி, திருகோணமலைக்கிளையின் அதிகாரியாகிய வன்னிய சிங்கம் விக்னேஸ்வரன் கடந்த ஏப்ரல்மாதம் 7 ஆம் திகதி கடமையில் ஈடுபட்டிருந்த போது சுட்டுப்படுகொலை செய்யப்பட்டதையும் இங்கு சுட்டிக் காட்ட விரும்புகிறோம். எனவே இப்படியான வன்செயலுக்கு காரணமானவர்களை உடனடியாகக் கண்டுபிடித்து சட்டத்தின் முன் நிறுத்துவதுடன் இத்தகைய சம்பவங்கள் இனிமேலும் நடைபெறாதிருக்க உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு அரசாங்கத்தை இத்தால் கேட்டுக்கொள்கிறோம்.

இத் துர்ப்பாக்கிய சம்பவத்தால் துயரப்படும் பொன். கணேசமூர்த்தியின் குடும்பத்தினருக்கு வங்கிச் சமூகத்தின் சார்பில் எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# பிரபாவைச் சந்திக்க பௌயர் விருப்பம்



இலங்கைக்கு வருகை தரும் நோர்வே சிறப்புத்தூதுவர் ஹன்சன் பௌயர் தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரனைச் சந்திக்க விருப்பம் தெரிவித்துள்ளதாக அரச தரப்பில் கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

நேரடியாக தலைவர் பிரபாகரனைச் சந்தித்து, இருபிரதான விடயங்கள் குறித்து ஆராயப்படவுள்ளதாக தமக்குத் தகவல் கிடைத்துள்ளதாக அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவிலாறு அணைக்கட்டைத் திறப்பது மற்றும் தற்போதைய தாக்குதல்களை நிறுத்துவது என்ற இரு முக்கிய பிரச்சினைகள் பற்றி நேரடியாக தலைவருடன் பேசுவதற்கு நோர்வே சிறப்புத் தூதுவர் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் கூறப்படுகிறது. எனினும் இதுகுறித்து விடுதலைப் புலிகள் தரப்பில் எதுவித கருத்தும் வெளியிடப்படவில்லை. (அ)

# யுத்தத்தை உடனடியாக நிறுத்த கோபி அனான் கோரிக்கை



வடக்கு-கிழக்கில் தற்போது எழுந்து யுத்தநிலைமை குறித்து ஆழ்ந்த அக்கறை கொண்டுள்ளதாகவும் குறிப்பாக தண்ணீர் பிரச்சினையையடுத்து ஏற்பட்ட யுத்தம் குறித்து அவதானித்து வருவதாகவும் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கோபி அனான் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது இடம்பெற்று வருகின்ற யுத்தத்தை இருதரப்பினரும் உடனேயே நிறுத்தி தன்னார்வ மற்றும் மனிதநேய அமைப்புக்களின் நிவாரணப் பணிகளுக்கு உதவ வேண்டுமெனவும் தடைப்பட்டுப் போயுள்ள பேச்சுக்களைத் தொடங்க வேண்டுமெனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தற்போதைய நெருக்கடியில் சிறுவர்கள் உட்பட பல பொது மக்கள் இடம்பெயர்ந்துள்ளார்கள் என்ற செய்தி வருத்தத்தை தருவதாகவும் தெரிவித்துள்ள கோபி அனான் இருதரப்பினரும் யுத்தத்தை நிறுத்தி தண்ணீர் விவகாரத்தைப் பேச்சுவார்த்தை மூலம் தீர்க்க வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார். (அ)

## தினசரி தியானம் விவேகச் சிந்தனைகள்



கடவுளுக்குதொண்டு செய்கிறோம். கடவுளை மகிழ்விக்கவே பணி செய்கிறோம். கடவுளை மகிழ்விக்கவே வாழ்கிறோம். இந்த மன நிலையில் வாழும்போது தான் வாழ்க்கை அர்த்த பூர்வமானதாக ஆகிறது.

# முகாமையாளரின் கொலையை கண்டித்து வங்கி ஊழியர்கள் கண்டன ஊர்வலம்

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கி காங்கேசன்துறை கிளையின் முகாமையாளர் பொன். கணேசமூர்த்தி நேற்றுக் காலை இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டதைக் கண்டித்து குடா நாட்டில் இயங்கும் அனைத்து வங்கி ஊழியர்களும் ஸ்ரான்லி வீதியிலுள்ள மக்கள் வங்கிக் கிளைக்கு வந்து தமது அனுதாபத்தைத் தெரிவித்தார்கள்.

பகல் 12 மணியளவில் ஸ்ரான்லி வீதி, மக்கள் வங்கி முன்பாக அனைத்து வங்கி ஊழியர்களும் ஒன்று கூடி கண்டன அமைதி ஊர்வலம் ஒன்றையும் ஆரம்பித்தனர்.

அக் கண்டன அமைதி ஊர்வ லம் ஸ்ரான்லி வீதியூடாக கே.கே. எஸ்.வீதியைச் சென்றடைந்து அங்கிருந்து மின்சார நிலைய வீதி, பெரிய கடை ஊடாக ஆஸ்பத்திரி வீதியிலுள்ள மக்கள் வங்கிக் காங்கேசன்துறை அலுவலகத்திற்கு முன்பாக நிறைவடைந்தது.

ஊர்வலத்தில் ஈடுபட்ட அனை வரும் 'பொன்.கணேசமூர்த்தியின் படுகொலையைக் கண்டிப்பதுடன் ஈவிரக்கமற்ற படுகொலையை வன்மையாகக் கண்டிப்போம்' எனக் கோஷம் எழுப்பினர்.

கணேசமூர்த்தியின் கொலைச் சம்பவத்தைக் கண்டிக்கும் முகமாக அனைத்து வங்கிகளும் நேற்று மூடப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (து-133)

# பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் நேற்று பெண்கள் பாடசாலையும் இணைவு

(துன்னாலை)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவர்கள் வகுப்புப் பகிஷ்கரிப்புக்கு ஆதரவாக மெடிஸ்த பெண்கள் கல்லூரியும் இணைந்து கொண்டது.

பருத்தித்துறைக் ஹாட்லிக் கல்லூரி மாணவன் கஜேந்திரன் காணாமல் போனதால் கொதிப்படைந்த கல்லூரி மாணவர்கள் கடந்த வியாழக்கிழமை முதல் தமது வகுப்புப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வந்தனர்.

இந் நிலையில் நேற்று வெள்ளிக்கிழமை முதல் சகோதரப் பாடசாலையான பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை மாணவிகளும் வகுப்புப் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் இணைந்து கொண்டனர்.

இதனால் இரு பாடசாலைகளும் மாணவர்கள் வரவின்றி வெறிச்சோடிக் காணப்பட்டன. இதேவேளை குறித்த இரு பாடசாலைகளும் அமைந்துள்ள கல்லூரி வீதியின் நுழைவாயிலுக்கு அருகே அமைக்கப்பட்டிருந்த காவலரண் பகுதியில் நேற்று முன் தினம் தொடக்கம் முட்கம்பி வேலி போடப்பட்டு ஒற்றையடிப் பாதை மட்டும் விடப்பட்டுள்ளமையைக் கண்டித்தும் ஹாட்லிக் கல்லூரி மாணவர்களுக்கு ஆதரவாகவும் இப் போராட்டத்தில் பெண்கள் பாடசாலையும் இணைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் காணாமல் போன மாணவன் பற்றிய தகவல் இற்றைவரைக் கிடைக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.(எ-10)

# இடம்பெயர்ந்தவர்களுக்குக் கொண்டு சென்ற பொருட்கள் படையினரால் தடுத்து நிறுத்தல்

மூதூரில் பாதிக்கப்பட்ட அகதிகளுக்கான உணவு மற்றும் நிவாரணப் பொருட்களை ஏற்றிச் சென்ற சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் லொறிகள் கந்தளாய்ப் பகுதியில் இராணுவத்தினரால் தடுத்து நிறுத்தப்பட்டது.

பாதுகாப்புக் காரணங்களைக் காட்டி கந்தளாய்-அல்லை வீதி வழியாக மூதூர்ப் பிரதேசத்திற்குச் செல்வதற்கு அனுமதிக்க முடியாது என்று கூறி இராணுவத்தினர் தடுத்துள்ளனர்.

முஸ்லிம் அகதிகளுக்கு வழங்க வேண்டிய அவசர நிவாரணப் பொருட்கள் என்று கூறியும் கூட படையினர் அனுமதி வழங்க மறுத்துள்ளனர் என செஞ்சிலுவைச் சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

படையினர் தடுத்த இடத்திற்கு சற்று அப்பால் சிங்கள காடையர்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை நடத்தியபடி இந்த வாகனங்கள் மீது தாக்குதல் நடத்துவதற்குக் காத்திருந்தைப் படையினர் அறிந்தனர்.

படையினர் இந்த ஆர்ப்பாட்டக்காரர்களை அப்புறப்படுத்துவதற்குப் பதிலாக அவர்களுக்கு துணை புரிந்ததுடன் அகதிகள் நலன் பற்றி சிறிதும் அக்கறை காட்டவில்லை என சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் கொழும்புக் கிளை பேச்சாளர் தெரிவித்துள்ளார்.(எ-5)

# திருடன் பிடிபட்டான்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண்ணை வெங்கடேஸ்வர வரதராஜப் பெருமாள் கோவிலில் நேற்று பெண் ஒருவரின் தாலிக் கொடியை திருடிய நபர் ஒருவர் கையும் மெய்யுமாகப் பிடிபட்டார்.இச் சம்பவம் நேற்று பிற்பகல் 12.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

நேற்று வரலட்சுமி விரதத்திற்காக சுமார் 4 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெண்கள் பெருமாள் கோவிலில் கூடினர். இந்நிலையிலேயே இத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அப் பகுதி இளைஞர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்ட திருடன் நையப்புடைக்கப்பட்ட பின் விடுவிக்கப்பட்டார். தாலிக் கொடியும் உரியவரிடம் ஒப்படைக்கப்பட்டது. (ச-133)

# பரீட்சைக் குழுவினர்களுக்கான அறிவுறுத்தற் கூட்டம்

வலிகாமம், வடமராட்சி வலயக் கல்வி அலுவலர்களையும் கோப்பாய் கோட்டக்கல்வி அலுவலர்களையும் கொண்ட யாழ்ப்பாண வலயம் 11 ற்கு உட்பட்ட ஆண்டு 5 ற்கான புலமைப் பரிசில் பரீட்சை -2006, க.பொ. த(உ/த) மாணவர் களுக்கான பொதுத் தகவல் தொழில்நுட்பப்பரீட்சை ஆளணியினருக்கான அறிவுறுத்தற் கூட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு யாழ். கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெற வுள்ளது.

மேற்படி பரீட்சைக்காக நியமிக்கப்பட்ட இணைப்பு அலுவலர்கள், உதவி இணைப்பு அலுவலர்கள், மேற்பார்வையாளர்கள், உதவி மேற்பார்வையாளர்கள் தவறாது சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (அ)

## யுத்தத்தை...

கூடிய நிலைமைகள் குறித்து ஆராய்வதே இவரின் விஜயத்தின் நோக்கமாகும் எனத் நோர்வேத் தூதரகம் தெரிவித்துள்ளது.

நேற்று மாலை கண்காணிப்புக் குழுத் தலைவர் உல்ப் ஹென்றிக்சனுடன் சமாதான நடவடிக்கையின் எதிர்காலம் குறித்து பெளயர் கலந்துரையாடினார்.

இதேவேளை யாழ்ப்பாணத்திற்கு இன்று வரும் ஜோன் ஹான்சன் பெளயர் நாளை விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளைச் சந்திப்பதற்காக இன்று கிளிநொச்சி செல்கிறார்.

அங்கு தங்கியிருக்கும் அவர் நாளை பேச்சுக்களில் ஈடுபடுவார். இதேவேளை தற்போது ஏற்பட்டுள்ள யுத்தத்தை முடிபுக்குக் கொண்டு வருவது குறித்து பெளயர் ஆராய்வார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ச-5)

## எறிகணை...

இராணுவத்தின் முன்னேற்றம் முறியடிக்கப்பட்டதாகவும் இதனையடுத்து படையினர் பின் வாங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படு கின்றது. காயப்பட்டவர்கள் வாழைச்சேனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.(ச-5)

## மூதூரில் அனைத்துப் ...

பல நாட்களாக பட்டினியாகக் கிடந்த மக்களை பாலத்தோப்பு மக்கள் வரவேற்று உணவளித்தனர். உடுத்த துணியுடன் குழந்தைகள், வயோதிபர்கள் என 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை மூதூரிலிருந்து இடம்பெயர்ந்து வெளியேறி கந்தளாய்,கிண்ணியா மற்றும் திருகோணமலை ஆகிய இடங்களுக்கும் மக்கள் இடம்பெயர ஆரம்பித்துள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கந்தளாய் சென்றடைந்த குடும்பங்கள் பல அங்குள்ள பாடசாலைகள் மற்றும் பொது இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான உதவிகளை வழங்குவதற்கான நடவடிக்கையினை ஐக்கிய நாடுகள் அகதிகள் ஸ்தானிகம் மேற்கொண்டுள்ளது.

திருகோணமலை சென்.ஜோசப் மருத்துவ நிலையத்தின் உதவியுடன் ஜேர்மன் வைத்தியக் குழுவினர் இவர்களுக்கான மருத்துவ உதவிகளை வழங்கி வருகின்றனர்.

அதேவேளை மூதூர் கிழக்குப் பகுதியிலும் வான் தாக்குதல் நடப்பதால் அப் பகுதி மக்களும் பாதுகாப்பான இடங்களுக்கு இடம் பெயர்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மூதூரில் தொடர்ந்து தாக்குதல்கள் இடம் பெற்று வருவதாகத் தெரிவித்த மக்கள், கடந்த மூன்று நாட்கள் உணவின்றி பெரும் கஷ்டத்தை எதிர்நோக்கியதாகத் தெரிவித்தனர்.

மூதூர்ப் பகுதி புலிகளின் கட்டுப்பாட்டில் இருப்பதாகவும் இராணுவம் கூறுவதைப் போன்று அங்கு நிலைமையில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

சில இராணுவ முகாம்கள் புலிகளின் முற்றுகைக்குள் இருப்பதாகவும் அவர்களை மீட்பதற்காக விமானப் படை, எறிகணைத் தாக்குதல்கள் இடம்பெறுவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

தாம் தேவாலயங்களில் இருந்த போது பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கியதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (ச-5)

## மூதூரில் இடம்பெயர்ந்த...

கோரிக்கைகளை விடுத்துள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தம்மிடம் உள்ள அனைத்துச் சேமிப்புக்களையும் பயன்படுத்தி போதிய உதவிகளை வழங்கி வருகின்றது.

மேலும் பல ஆயிரம் அகதிகள் வந்த வண்ணம் உள்ளதால் திருகோணமலை மாவட்டத்தில் தஞ்சம் அடையும் அகதிகளை பராமரிக்க உதவுமாறு உத்தியோக பூர்வமாக புனர்வாழ்வுக் கழகம் கோரிக்கை விடுத்துள்ளது.

தண்ணீர், உணவு மற்றும் அடிப்படை வசதிகளை வழங்க முன்வருமாறு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் கோரியுள்ளது. இதற்கிடையில் கிண்ணியா முஸ்லிம் சபைத் தலைமையிடம் இருந்து தங்களது மக்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் கிடைத்து வரும் உதவிகளுக்கு நன்றி கூறப்பட்டிருக்கும் அதேவேளை தொடர்ந்தும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் உதவிகள் தேவைப்படுவதாக வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-5)

# ஒத்திகை நிகழ்ச்சி

நல்லூர் கந்தன் ஆலய கார்த்திகை உற்சவத்தை முன்னிட்டு இசை அர்ப்பண நிகழ்ச்சி ஒத்திகை இன்று பிற்பகல் மூன்று மணிக்கு நல்லை ஆதீனத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## மேலும் 5...

சண்டைகளில் முப்பதிற்கும் மேற்பட்ட பொது மக்கள் படையினரின் எறிகணை வீச்சுத் தாக்குதலினால் கொல்லப்பட்டுள்ளனர்.

இதேவேளை சர்வதேச அழுத்தங்களைப் பிரயோகித்து இருதரப்பின் தாக்குதல்களையும் உடன் நிறுத்துமாறு கோரவேண்டும் என்று ரவூப் ஹக்கீம் கேட்டுள்ளார்.

அத்துடன் மூதூர்ப் பகுதியில் பாதிப்புக்குள்ளான முஸ்லிம் மக்களுக்கு உரிய நிவாரண உதவிகளை வழங்கும்படியும் ரவூப் ஹக்கீம் அரசைக் கோரியுள்ளார். (ச-5)




## காங்கேசன்துறை கிளை முகாமையாளர்...

சென்று விசாரணைகளை மேற்கொண்ட யாழ்.மாவட்ட மேலதிக நீதிபதி திருமதி சிறிநிதி நந்தசேகரன் மரண விசாரணையின் பொருட்டு சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.

1965 காலப் பகுதியிலிருந்து விடுதலைப் போராட்டத்திற்குப் பங்களிப்பு அளித்துவரும் இவர் நேரடியாகவே அரசுக்கு எதிராக தன்னுடைய விடுதலைக்கான செயற்பாடுகளை அன்றிலிருந்து தொடங்கியவர் என விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

அன்று முதல் தன் கலைப் படைப்புக்கள் வழியாக மக்களிடம் விடுதலைக்கான கருத்துக்களை விதைத்து வந்தார் எனவும் பல துறை கலையாற்றல் கொண்ட இவர், புலிகளின்குரல் வானொலியில் 'இலங்கை மண்' 'வைகறை' ஆகிய தொடர் நாடகங்களையும் தனி நாடகங்களையும் உருவாக்கி வழங்கியிருந்தார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

புலிகளின் குரலில் தற்போது 'பொன் பரப்பித்தீவு' என்ற இலங்கை மண்ணில் தமிழரின் தொன்மையை நிறுவும் இவரின் தொடர் நாடகம் ஒலிபரப்பாகிவிருகிறது.

அத்துடன் 1993 காலப் பகுதியில் 93 தடவைகள் மேடையேற்றப்பட்ட 'சந்தனக் காடு' நாடகத்தை இயற்றியவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

புலிகளின் குரலில் வில்லிசை உரை வீச்சு உட்பட்ட பல்வேறுபட்ட நிகழ்ச்சிகளைப் படைத்திருந்த இவர், பெருமளவிலான விடுதலைப்பாடல்களையும் உருவாக்கியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. இதேவேளை இவர் சிறந்த பட்டிமன்றப் பேச்சாளர் ஆவார்.

விடுதலைக் கருத்துக்களை விதைப்பதற்காக அரங்க நாடகங்களும் பொன். கணேசமூர்த்தியினால் பாடசா லைப் பருவம் முதல் அரங்கேற்றப்பட்டுள்ளதுடன் 'தூரம் தொடுவானம்' என்ற நாவல் 'துளித்துளியாய் வைரங்கள்' 'தமிழ்- ஆங்கில கவிதைத் தொகுதி' 'எடுக்கவோ தொடுக்கவோ' கவிதைத் தொகுதி ஆகியனவும் இவரால் வெளியிடப்பட்டுள்ளன.

இன எழுச்சி சஞ்சிகையின் ஆசிரியராக செயற்பட்ட இவரின் 'இலங்கை மண்' நாடகம் வெளியிட்டுக்காக நூலுருப் பெற்றுள்ளது. 'வரலாறு சொல்லும் பாடம்' நூலை உரு வாக்குவதில் தீவிரமாக உழைத்து வந்தார்.

நிதர்சனம் தயாரிப்பில் 'மண்ணுக்காக' என்ற வீடியோத் திரைப்படத்தையும் இவர் உருவாக்கினார் என்பது குறிப்பிடத்தக்கது. (து-133)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில 05.08.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.